# உதயன்

சுடர் : 36 | கதிர் : 219 | சனிக்கிழமை | ஆனி 19 ஆம் நாள் 03 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## பாடசாலைகள் இந்த மாதம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 3
நாட்டில், 100க்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை, இந்த மாதத்துக் 19 >

## 'டெல்டா' பரவலுக்கு அரசு பொறுப்பல்ல

### சமூகத் தொற்றுக்கு ஆதாரம் இல்லை; ரோஹணவுக்கு சுகாதார அமைச்சு பதிலடி

கொழும்பு, ஜூலை 3
"கொரோனா வைரஸின் புதிய வகையான டெல்டா திரிபு இலங்கையில் பரவியமைக்கு அரசு பொறுப்பல்ல. அதேவேளை, டெல்டா திரிபு சமூகப் பரவலாக மாறியுள்ளமைக்கும் எந்த ஆதாரமும் இல்லை." என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். 'டெல்டா' திரிபு நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவியுள்ளது எனப் பொதுச் 19 >

## 37 சாவு; 1,737 தொற்று

கொழும்பு, ஜூலை 3
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறி 19 >

## கொரோனா மையத்தில் உயிர்மாய்க்க முயற்சி

வவுனியா, ஜூலை 3
வவுனியா கொரோனா இடைநிலை சிகிச்சை மையத்தில், ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முற்பட்டுள்ளார் 19 >

## கள் தவறணைகளை மீளத்திறக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 3
வடக்கு மாகாணத்தில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இன்றிலிருந்து கள் தவறணைகளைத் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்று பனை அபிவிருத்தி அதிகார சபை 19 >

# 50,000 தடுப்பூசிகள் இன்று யாழ்ப்பாணத்துக்கு வரும்

### நாளை தடுப்பூசி ஏற்றல் ஆரம்பமாகலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 3
**இலங்கைக்கு நேற்றுக்காலை கிடைக்கப்பெற்ற 10 லட்சம் சைனோபோர்ம் தடுப்பூசிகளில் 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் எடுத்துவரப்படவுள்ளன. இவை 60 வயதுக்கு மேற்பட்டோர், தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கும், முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கும் ஏற்றப்படவுள்ளன.** 19 >

## நாயாற்றுப் பகுதியை உடனடியாக முடக்கவும்

முல்லைத்தீவு, ஜூலை 3
முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றுப் பகுதியில் தென்பகுதியைச் சேர்ந்த அதிகளவான கடற்றொழிலாளர்கள் மிகவும் நெருக்கமாக சுகாதார அறிவுறுத்தல்களை மீறி எதுவித சுகாதார கட்டுப்பாடுகளும் இன்றி 19 >

## எழுமாற்று சோதனையில் 12 பேருக்கு தொற்று

வவுனியா, ஜூலை 3
வவுனியா நகரில் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் 19 >

## தேர்தல் முறைமையில் மாற்றம் எவரையும் வெட்டி ஓடமாட்டோம்



### கூறுகின்றார் மனோகணேசன்

கொழும்பு, ஜூலை 3
தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சி 19 >

## மற்றொரு கலந்தாய்வுக்கு ரெலோ மீளவும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3
தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலான மற்றொரு சந்திப்புக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அழைப்பு விடுத்துள்ளது. தமிழர்களின் 19 >

## அல்லைப்பிட்டி விடுதிக்கு 'சீல்' 19 பேர் தனிமை

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் உள்ள விடுதியில் பிறந்தநாள் கொண்டாடினர் என்று கூறப்படும் 19 பேர் அதே விடுதியில் தனிமைப்படுத் 18 >

## 9 கட்சிகளின் இணைவு மூலமாக பேச்சைத் தொடரலாம்தானே!

### சிறிகாந்தா பதில் கடிதம்
### ரெலோவின் அடுத்த முயற்சியும் தளம்புமா?

யாழ்ப்பாணம், ஜூலை 3
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) இரண்டாவது முறையாக முன்னெடுத்துள்ள ஒற்றுமை முயற்சியும் பிசுபிசுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே 9 தமிழ் கட்சிகள் இணைந்த ஒற்றுமை முயற்சி முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதை தொடர்வதே பொருத்த 18 >

## முள்ளியவளை கிணற்றில் ஆர்.பி.ஜி. எறிகணைகள்



முல்லைத்தீவு, ஜூலை 3
முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முதலாம் வட்டாரபகுதியில் அமைந்துள்ள தனியார் வீடு ஒன்றின் கிணற்றிலிருந்து, வெடிபொருள்கள் நேற்று இனம்காணப்பட்டுள்ளன. சம்பவம் தொடர் 18 >

## அ.அட்டைகள் வழங்கும் பணி மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 3
ஆள்பதிவுத் திணைக்களத்தின் சேவைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள் 18 >


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்களின் ... தமிழ் நாளிதழ்



## வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் நடந்தது என்ன?

தடயப்பொருள் பகுப்பாய்வு திணைக்களத்துக்கு

கொழும்பு,ஜூலை 3

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக, அமைச்சரின் வீட்டில் பொருத்தப்பட்ட சி.சி.ரி.வி கமரா கார்ட்டிஸ் (வன்தட்டு) மொரட்டுவ அரச இராசயனவியல் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி அமைச்சரின் வீட்டிக்கு முன்னால் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரால், ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். இதில் மகாலிங்கம் பாலேந்திரன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் முக்கிய தடையப்பொருளாக அமைச்சரின் வீட்டில் பொருத்தப்பட்ட சி.சி.ரி.வி. கமராவின் பாகமான டி.வி.ஆர் கார்ட்டிஸ் (வன்தட்டு) சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் ஒரு மாதத்துக்கு மேலாக பழுதடைந்து கழற்றப்பட்டு திருத்தக்கொடுக்கப்பட்டது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

இதனையடுத்து அந்த காட்டிஸ் (வன்தட்டு) பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது மொறட்டுவவில் உள்ள களணி மற்றும் இலத்திரனியல் தொடர்பான அரச இராசனவியல் பகுப்பாய்வு திணைக்களத்துக்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஓ.4)

# 2029 ஆம் ஆண்டு வரை பொருளாதார நெருக்கடி

ஒப்புக்கொள்கிறார் அமைச்சர்



**கொழும்பு,ஜூலை 3**

**பொருளாதார ரீதியாக நாடு பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. தற்போதுள்ள நிலையில் 2029 ஆம் ஆண்டு வரை யார் ஆட்சியில் இருந்தாலும், வருடத்துக்கு 4.5 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாகச் செலுத்தியே ஆக வேண்டும்.**

அடுத்த ஒரு வாரத்துக்குள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைச் செலுத்தாவிட்டால் நாடு பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பல தடைகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இதற்கு ஜனாதிபதி கோத்தாபயவோ, பிரதமர் மஹிந்த ராஜபக்சவோ அல்லது எமது அரசோ காரணம் அல்ல.

நாட்டின் பொருளாதார நெருக்கடி என்பது ஒரு நாளில் வருவதும் அல்ல. நீண்ட காலமாக தீர்வு காணப்படாத பிரச்சினைகள் இறுதியாக நெருக்கடியை உருவாக்கும். இன்று நாம் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு 2015 ஆம் ஆண்டு அரசே காரணமாகும்.

முன்னைய ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் விவசாயம் வீழ்ச்சி கண்டது. சகல ஏற்றுமதியும் நிறுத்தப்பட்டு இறக்குமதிக்காக நாடு திறக்கப்பட்டது.

131 ரூபாவில் இருந்த டொலருக்கான பெறுமதி நாம் ஆட்சியை மீண்டும் கைப்பற்றும் வேளையில் 181 ரூபாவாக உயர்த்தப்பட்டிருந்தது. நாட்டின் பொருளாதாரத்தை இனியும் முன்னெடுக்க முடியாது என்ற நெருக்கடி நிலையிலேயே ஆட்சி எமது கைகளுக்கு கிடைத்தது.

இப்போதே நாம் வீழ்ச்சி கண்ட நாடாக மாறியுள்ளோம். நாம் வெளிநாடுகளில் இருந்து பொருள்களை இறக்குமதிசெய்யும் வேளையில் கடன் பத்திரமொன்றை கையாள வேண்டும். இது இல்லாது எதனையும் இறக்குமதி செய்ய முடியாது. தடுப்பூசிகளைக்கூட கொண்டுவர முடியாது. எனவே நாட்டின் நிலைமைகளை சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டும். கட்சி, அரசியலைத் தாண்டி நாடு குறித்து சிந்திக்க வேண்டும். - என்றார். (ஓ.4)

## ஒரே நாளில் 105 இடங்களில் தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு,ஜூலை 3

நாட்டில் ஒரே நாளில் 105 இடங்களில்கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளன.

கொழும்பு, கம்பஹா, குருநாகல், புத்தளம், காலி, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம், இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள 105 சுகாதார மருத்துவ பிரிவுகளில் தடுப்பூசி செலுத்தும் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதற்கமைய அன்றையதினம் மாத்திரம் ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 995 பேருக்கு சைனோஃபோம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இது தவிர 2 ஆயிரத்து 523 பேருக்கு அஸ்ராஜெனகா இரண்டாம் கட்ட தடுப்பூசி செலுத்தப்பட்டது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (ஓ.4)

அசாத் சாலி மீது

## ஒரேயொரு குற்றச்சாட்டு ஆனால் 50 வாக்குமூலங்கள்

தேசிய ஐக்கிய முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 3

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி 100 நாள்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். 50 க்கும் அதிகமான வாக்குமூலங்கள் அவரிடம் பெறப்பட்டுள்ளன. எனினும் அவர் மீது மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரத்தில் ஒரேயொரு குற்றச்சாட்டே சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அசாத் சாலி ஊடக சந்திப்பொன்றில் ஷரீஆ சட்டம் முஸ்லிம்களுக்கு மிகவும் முக்கியமானது என்ற தொனியில் பேசிய விடயமே குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற பல விடயங்களை இதற்கு முன்பு பேசி மக்களை வன்முறைக்கு தூண்டிவிட்ட பலர் இன்றும் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர்.

அசாத் சாலி கைதுசெய்யப்பட்டபோது நாடாளுமன்றத்திலும், வெளியிலும் சம்பந்தப்பட்ட அமைச்சரும், அதிகாரிகளும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களுடன் அசாத் சாலி தொடர்பு கொண்டிருந்தார் என்றே தெரிவித்து வந்தனர். ஆனால் அது பொய்யென தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனாலேயே நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தில் அது பற்றி ஒரு வார்த்தை கூட பிரஸ்தாபிக்கப்படவில்லை.

தற்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பாரதூரமற்றவை என்று நிரூபிக்க முடியும். அதனால் அசாத் சாலி பிணையிலோ அல்லது நிரந்தரமாகவோ வீடு திரும்புவார் என்ற நம்பிக்கை யுண்டு.

இந்த நாட்டின் சட்டத்துறை மீதும், நீதிமன்றக் கட்டமைப்பின் நடுநிலைத்தன்மை மீதும் தொடர்ந்தும் நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த வழக்கை சட்ட ரீதியாக எதிர்கொள்ள நாம் தயாராகவுள்ளோம்- என்றுள்ளது. (ஓ.4)



# நாட்டின் பொருளாதாரம் பெரும் அபாய கட்டத்தில்

ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை 3

நாட்டின் பொருளாதாரம் பெரும் அபாய கட்டத்தில் உள்ளது. எனவே அதனை நிவர்த்தி செய்ய உடனடியாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும். நாணயத்தாள்களை அச்சிடுவதால் மட்டும் நாட்டை அபிவிருத்திசெய்ய முடியாது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவிக்கையில்,

சுதந்திரத்தின் பின்னர் முதன் முறையாக நாடு பெரும் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை முன்னெடுத்து உரிய தீர்வைக் காணாவிட்டால் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும். மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும். நாட்டில் தற்போது உற்பத்தியை விட நுகர்வு வீதம் அதிகமாகவுள்ளது. இதனால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கடந்த அரசு பல பில்லியன் டொலர் சர்வதேச கடனைப் பெற்று தாமரைக் கோபுரம், சூரியவெள கிரிக்கெட் மைதானம் மற்றும் அம்பாந்தோட்டை விளையாட்டரங்கு ஆகியவற்றுக்கு வீணாக நிதியைச் செலவிட்டது.

இதனை ஏதேனும் பிரயோசனமான வேலைத்திட்டங்களில் முதலீடு செய்திருந்தால் பயன் பெற்றிருக்க முடியும்.

அதேவேளை நாட்டில் அளவுக்கு அதிகமாக நாணயத்தாள்களை அச்சிடுவதால், இலங்கை ரூபாவின் நாணயப் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாணயத்தாள்களை அச்சிடுவதால் நாட்டை அபிவிருத்திசெய்ய முடியாது. - என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரண்டாவது 'டோஸ்' ஏற்ற இன்று கடைசி நாள்

சாவகச்சேரி, ஜூலை 3

தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

தடுப்பூசியின் இரண்டாவது டோஸை ஏற்றுவதற்கு நேற்று இறுதி நாள் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மக்களின் நலன்கருதி இன்று வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாமல் இன்று அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் முதலாம் கட்ட கொரோனா தடுப்பூசியை 6 ஆயிரத்து 55 பேர் பெற்றுக்கொண்டனர். இரண்டாம் கட்ட தடுப்பூசி மருந்து கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் ஏற்றப்பட்டு வருகின்றது. இறுதி நாளான நேற்று வரை 5 ஆயிரத்து 500 க்கு மேற்பட்டோர் தடுப்பூசியை ஏற்றியுள்ளனர். (ஐ-9)

## மா விலை அதிகரித்தால் சட்டநடவடிக்கை எடுப்போம்

*இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை 3

கோதுமை மா விலையை அதிகரித்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தெரிவித்துள்ளார். உணவுப் பொருள்களுக்கான அதிகபட்ச விலை நுகர்வோர் விவகார அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே நிறுவனங்கள் தன்னிச்சையாக அவற்றின் விலையை அதிகரிக்க முடியாது. அதனால் குறித்த நிறுவனங்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபையால் எதிர்வரும் நாள்களில் வழக்குத் தொடரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

### ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை

# வழங்கினால் வழங்குங்கள் இல்லாவிடினும் கவலையில்லை

## இராஜாங்க அமைச்சர் வீராப்பு

**கொழும்பு, ஜூலை 3**

**ஜி.எல்.பி. பிளஸ் வரிச்சலுகைக்காக நாட்டின் இறைமையை விட்டுக் கொடுக்க முடியாது. வரிச்சலுகை கைநழுவிப்போனால்கூட பொருளாதார ரீதியிலான சவால்களை எதிர்கொள்ள முடியும். அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுவருகின்றன என்று அரசு அறிவித்துள்ளது.**

ஜி.எல்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பான விசேட ஊடகவியலாளர் மாநாடொன்று அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பங்கேற்றிருந்தார்.

இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கான யோசனை ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. வரிச்சலுகை இல்லாமல் போகுமா, அவ்வாறு நடந்தால் அதனை எதிர்கொள்வதற்கு தயாரா என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை, பொலிவியா மற்றும் பாகிஸ்தான் உட்பட 9 நாடுகளுக்கே ஐரோப்பிய நாடுகளால் மேற்படி ஏற்றுமதி வரிச்சலுகை வழங்கப்படுகின்றது. ஏனைய நாடுகளுக்கு அவ்வாறு வழங்கப்படுவதில்லை. அவ்வாறு வழங்கப்படும் வரிச்சலுகையை மாற்றுவதற்கான யோசனையே முன்மொழியப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்கு சில நிபந்தனைகள் முன்வைக்கப்படும். அவை பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் கிடையாது. நாடொன்று எவ்வாறு செயற்பட வேண்டும், கொள்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும், மேற்படி நாடுகள் குறிப்பிடுவதுபோல மனித உரிமைகள் உள்ளனவா என்பவை உட்பட பல காரணிகள் இதில் உள்ளடங்கும்.

இலங்கைக்கு மேற்படி வரிச்சலுகையை வழங்குவதற்கான யோசனை 2002 இல் முன்வைக்கப்பட்டு 2005 இல் அது கிடைக்கப்பெற்றது. பின்னர் 2010 இல் வரிச்சலுகை நீக்கப்பட்டது. அப்போது அது தொடர்பில் பல கோணங்களில் சர்ச்சைக்குரிய கருத்துகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக பொருளாதாரம் சரியும், 6 லட்சம் பேர் வீதிக்கு வரவேண்டிய நிலை ஏற்படும், தொழிற்சாலைகள் மூடப்படும், நாடு என்ற அடிப்படையில் மீண்டெழமுடியாது என்றெல்லாம் கருத்துகள் வெளியிடப்பட்டன. ஆனால் என்ன நடந்தது? ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி குறையவே இல்லை. மாறாக 20 சதவீதத்தால் ஏற்றுமதி அதிகரித்தது. இது பற்றி எவரும் கதைப்பதில்லை. 2010ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடத்திலும் ஏற்றுமதி அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை.

2010 இல் இரத்துச்செய்யப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை 2017 இல் மீளப்பெறுவதற்கு கடந்த அரசு பல நிபந்தனைகளை ஏற்றது. ஜெனிவாத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை, படையினரை சிறையில் அடைத்தமை, பயங்கரவாதிகளை விடுதலை செய்தமை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகத்தை நிறுவியமை உள்ளிட்ட விடயங்களைக் குறிப்பிடலாம்.

இலங்கை இறைமைமிக்க நாடு, எனவே, இவற்றை செய்யவேண்டாம் என நாட்டு மக்கள் கூறினர். மக்களின் அபிலாசைகளின் பிரகாரமே நாம் செயற்பட்டுவருகின்றோம். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை விடயத்தில் எமக்கு இரண்டு தேர்வுகள் உள்ளன.

ஒன்று இராஜதந்திர மட்டத்தில் எமது தரப்பு நிலைப்பாடுகளை, கருத்துக்களை தெளிவுபடுத்த வேண்டும். அதனை கட்டாயம் செய்தாக வேண்டும். வெளிவிவகார அமைச்சு உள்ளிட்ட தரப்பு இதில் பங்கேற்று, நாட்டு இறைமையை பாதுகாத்து செயற்படும் விதத்தை குறிப்பிடவேண்டும். அதற்கான பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

அடுத்தது, வரிச்சலுகை மீண்டும் இரத்துசெய்யப்பட்டால் அதற்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது தொடர்பிலும் தயாராக வேண்டும். அது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அடுத்தவாரமளவில் பரந்துபட்ட கலந்துரையாடல் இடம்பெறும்.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை இரத்துசெய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட சூழ்நிலைக்கு கடந்த முறை நாம் வெற்றிகரமாக முகங்கொடுத்தோம். நாட்டின் இறைமையை பாதுகாக்க வேண்டுமெனில் வெளிச்சக்திகளின் பிடிக்குள் சிக்கக்கூடாது. இறைமையை பாதுகாத்துக்கொண்டு பொருளாதாரத்தையும் இயக்கவேண்டும். அதற்கான பொறிமுறையும் உருவாக்கப்படவேண்டும். 2010 இலும் எம்மால் முடியாது என்றனர். நிபந்தனைகளை ஏற்குமாறு வலியுறுத்தினர். தற்போதும் அவ்வாறு குறிப்பிடுகின்றனர். தயார்படுத்தல் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுள்ளோம். வரிச்சலுகை இல்லாமல்போனாலும் அதற்கு முகங்கொடுப்போம். வரிச்சலுகை தொடர்ந்து வழங்கப்படாலும் பரவாயில்லை- என்றார். (ஒ.44)

# மாத இறுதிக்குள் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

மேல் மாகாணத்தில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், இந்த மாத இறுதிக்கு முன்னர் தடுப்பூசிகளை வழங்குமாறு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சுகாதாரத் துறைக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தற்போது கொழும்பு மாவட்டத்தில் இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த 60 சதவீதமானவர்களுக்கும் கம்பஹா மாவட்டத்தில் 47 சதவீதமானவர்களுக்கும், களுத்துறை மாவட்டத்தில் 34 சதவீதமானவர்களுக்கும் முதலாவது டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.



கொள்வனவுக்கான கட்டளைகள் முழுமைப்படுத்தப்பட்டிருக்கும் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதும், முறையான ஒரு திட்டத்தின் கீழ் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் அதிகளவு தடுப்பூசிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து, கொரோனாக் கட்டுப்பாட்டுக் குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

இரண்டாம் டோஸ்க்குத் தேவையான அஸ்ராஜெனகா தடுப்பூசிகள் விரைவில் கிடைக்குமென ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

அஸ்ராஜெனகா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட ஒருவருக்கு, 45 வாரங்களுக்குள் அதன் இரண்டாவது டோஸைப் பெற்றுக்கொள்ள முடியுமென, உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ளது என கொரோனாக் கட்டுப்பாட்டுக் குழுவின் உறுப்பினர் மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன சுட்டிக்காட்டினார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரமும் புதிய வழிகாட்டல்

கொழும்பு,ஜூலை 3
புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளன.
இலங்கையில் தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையை ஆய்வு செய்த பின்னர், புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என்று மேல் மாகாண சுகாதார சேவைகள் இயக்குநர் மருத்துவர் தம்மிக ஜெயலத் தெரிவித்துள்ளார்.
சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட சிறப்பு தொழில்நுட்பக் குழு அடுத்த சில நாள்களில் நாட்டின் தொற்று நிலைமையை ஆய்வுசெய்யவுள்ளது.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மே மாதம் வெளியிட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் மேல்மாகாணம் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு தனித்தனியாக விதிமுறைகளை கோடிட்டுக் காட்டுகின்றன.
குறிப்பாக சுகாதார வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தடையைப் புறக்கணித்து செயற்பட்ட பல துணிக்கடைகளை மூட அதிகாரிகள் உத்தரவிட்டனர். அதனடிப்படையில் புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

# பஸிலால் முடியாது

**கொழும்பு,ஜூலை 3**



**பஸில் ராஜபக்ச நாடாளுமன்றுக்கு திரும்பி வந்தாலும் வளமான நாட்டை உருவாக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னைய அரசொன்றில் பஸில் ராஜபக்ச இருந்தார். அந்த அரசில் அவர் நிதி மற்றும் பொருளாதார அமைச்சராக இருந்தார்.
எவ்வாறாயினும், அந்த அரசு தோற்கடிக்கப்பட்டது. தற்போதைய அரசிலும் பஸில் ராஜபக்ச பொருளாதார மேம்பாட்டுக் குழுவின் தலைவராகச் செயற்படுகின்றார்.
எனினும், அன்றிலிருந்து என்ன செய்து கொண்டிருந்தார். பஸில் ராஜபக்ச திரும்பி வந்தால், நாட்டில் ஒன்று அல்லது இரண்டு சொத்துக்கள் விற்கப்படும் - என்றார். (ஓ.4)

# இயற்கை விவசாயம் இணையத்தில் பகிர்வு

கொழும்பு,ஜூலை 3
இயற்கை விவசாயத்தில் இந்தியாவின் வெற்றிக் கதைகள் தொடர்பில், இணையம் மூலம் இலங்கைக்குப் பகிரப்பட்டது.
இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு அமைவாக, இந்தியத் தூதரகம் இதனை ஏற்பாடுசெய்தது.
நிகழ்வில் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே சிறப்புரையாற்றினார்.
இலங்கையின் சார்பில் திறன் மேம்பாடு, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புத்துறை அமைச்சர் சீதா அரம்பேபொல மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச ஆகியோரும் உரையாற்றினர்.
திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் நிறுவனங்களிடையே ஆராய்ச்சி ஒத்துழைப்பு விடயங்களில் பரந்த அனுபவத்தைப் பயன்படுத்த இலங்கைக்கு அழைப்புவிடுக்கப்பட்டது.
இந்திய உதவியுடன் இலங்கையில் சிறப்பா[illegible] இயற்கை விவசாய நிலையம் ஒன்றை அமைக்கவும் பரிந்துரைக்கப்பட்டது.
இலங்கை 100 வீத இயற்கை விவசாயத்துக்குமாறவேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச சுட்டிக் காட்டினார். (ஓ.4)

# கல்முனைப் பெண் ஒருவர் 6 மாதங்களாக தடுத்து வைப்பு

*உரிமை மீறல் வழக்கில் விளக்கமளிக்க அதிகாரிகளுக்கு மன்று பணிப்பு*

கொழும்பு,ஜூலை 3
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சட்டவிரோதமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, தமிழ்ப் பெண் தொடர்பில் விளக்கமளிக்குமாறு, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சி.ஐ.டி., ரி.ஐ.டி. பணிப்பாளர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு இந்த அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.
கல்முனையைச் சேர்ந்த, 36 வயதான கருப்பையா செல்வகாந்தி என்பவர், சட்டத்தரணி எம்.ஏ. மதீன் ஊடாக தாக்கல்செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்ந்து, நீதிமன்று இந்த அறிவித்தலை பிறப்பித்துள்ளது.
எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி மன்றில், விளக்கமளிக்குமாறு உயர்நீதிமன்று, அதிகாரிகளுக்கு அறிவித்தல் அனுப்பியுள்ளது.
சுவிட்ஸர்லாந்தில் உள்ள தனது கணவரிடம் செல்லும் நோக்கில், முகவர் ஒருவரிடம் ஆவணங்களைச் சமர்ப்பிக்கச் சென்ற இடத்தில், குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த 6 மாதங்களாக காரணங்கள் எவையும் வெளிப்படுத்தப்படாது அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
இவரது கைது மற்றும் தடுத்து வைப்பு ஆகியவை சட்ட விரோதமானவை என்று தெரிவித்து சட்டத்தரணி மதீனால் தாக்கல்செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு, உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, யசந்த கோதாகொட மற்றும் ஏ.எச்.எம்.டி. நவாஸ் ஆகியோர் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.
மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் பாரூக் விடயங்களை முன்வைத்தார். அதனடிப்படையில் மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளவர்களுக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. (ஓ.4)





யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் பொருண்மியம் நலிவடைந்த நிலையில் உள்ள 20 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அத்தியாவசிய உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. உலர் உணவுப் பொருள்களை வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் பயனாளிகளிடம் கையளித்தார். (ஐ-159)


# கொரோனாவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 3
கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.
யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல்பிரியந்த பெரேராவின் எண்ணக்கருவுக்கு அமைய 52 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி ஜேர் ஜெனரல் ஹரேந்திர பீரிஸ் தலைமையில் அரியாலை சர்வோதயா மண்டபத்தில் இந்த நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (ஐ)



# தங்கத்துக்கு தட்டுப்பாடு

கொழும்பு,ஜூலை 3
இலங்கையில் தங்கத்துக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தங்க ஆபரண சங்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் ஏ.விஜேகுமார் தெரிவிக்கையில்,
தங்கத்தை இறக்குமதிசெய்வதற்கு கடுமையான வரையறைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்தால், தட்டுப்பாட்டு ஏற்பட்டுள்ளது.
இதனால் தங்க ஆபரணத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.



நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தங்கம் இறக்குமதி செய்ய பிறப்பிக்கப்பட்ட வரையறைகள் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளன - என்றார். (ஓ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘சிஸ்டம்’ சரியில்லை என்பதுதான் உண்மை

## அரசின் பங்காளியான சு.க. பொதுச் செயலர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 3**

**பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதாலோ, அமைச்சரவையை மறுசீரமைப்பதன் ஊடாகவே இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. எனவே, தற்போதுள்ள முறைமையில் (சிஸ்டத்தில்) மாற்றம் அவசியம். அந்த மாற்றத்தை ஜனாதிபதியால்கூட செய்யமுடியாதுள்ளது என்று அரச பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.**

அமைச்சரவை மறுசீரமைப்பு உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அவை தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி திட்டமிட்டுள்ளது. சந்திப்புக்கான திகதியும் கோரப்பட்டுள்ளது. இதன்படி அரசியல் பிரச்சினை, உரப்பிரச்சினை, வெளிவிவகாரக் கொள்கை மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியவை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அமைச்சு பதவிகளை மாற்றுவதன் மூலமோ, அமைச்சரவை மறுசீரமைப்பு ஊடாகவோ இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகள் தீரப்போவதில்லை. சிஸ்டத்தில்தான் பிரச்சினை உள்ளது. அந்த சிஸ்டத்தை மாற்றியமைப்பார் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களிக்கப்பட்டது. எனினும், சிஸ்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஜனாதிபதிக்கும் சிற்சில பிரச்சினைகள் இருப்பதை உணரமுடிகின்றது. குறிப்பாக அரசியல் ரீதியில் அவருக்கு கட்சி பலம் இல்லை என்பது பிரதான காரணியாகும்.

பிரச்சினைகளைத் தீர்க்கவே அமைச்சரவை நியமிக்கப்பட்டது. அதற்கான வழிகளைத் தேட வேண்டும். அதனை விடுத்து அமைச்சரவை மறுசீரமைப்புமூலம் பிரச்சினையை தீர்க்கமுடியும் என நாம் நம்பவில்லை. அதே வேளை, பஸில் ராஜபக்ச அமைச்சு பதவியை வகிக்காவிட்டாலும் அதிகாரம் படைத்தவராகவே விளங்குகின்றார். கொரோனா தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பிரதானியாகவும் செயற்படுகின்றார். எல்லா பிரச்சினைகளின்போதும் தலையீடுகளை செய்தார். எனவே, நாடாளுமன்றம் வந்து விசேடமாக எதனையும் செய்யப்போவதில்லை. அவர் நாடாளுமன்றம் வருவதை நாம் எதிர்க்கவில்லை. எனினும், வந்தால் புதிதாக எந்த பிரச்சினையும் தீரப்போவதில்லை. சிஸ்டத்தில்தான் பிரச்சினை உள்ளது- என்றார். (ஒ.44)



# 3 அதிசொகுசு பஸ்கள் பொலிஸாரிடம் சிக்கின

*3 பேருக்குத் தொற்று உறுதி*

கொழும்பு,ஜூலை 3

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த மூன்று அதி சொகுசு பேருந்துகள் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளன.

கரடியனாறு பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு இந்த பஸ்கள் சிக்கின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உள்ளிட்ட 49 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை பஸ்ஸில் பயணம் செய்தவர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 3 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ.4)

# செயற்றிறனற்ற அமைச்சர்களின் பதவிகள் பறிபோகும் அபாயம்

கொழும்பு,ஜூலை 3

பணிகளை உரிய முறையில் மேற்கொள்ளாத அமைச்சர்களை, அமைச்சரவையில் இருந்து நீக்கி, அவர்களுக்கு குறைந்த மட்ட அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவையில் பல மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. அதனடிப்படையில் பலருக்கு பதவி மாற்றங்கள் ஏற்படும் என்று அரச உயர்மட்ட தகவல் வட்டாரங்களை அடிப்படையாகக்கொண்டு குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

செயற்பாட்டில் பலவீனமான மட்டத்தில் உள்ள அமைச்சர்கள்மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இதனை அடிப்படையாகக்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய அமைச்சுப் பதவிகள் சிலவும் ஏற்படுத்தப்படவுள்ளன என்றும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.4)



# மட்டுவில் வடக்கில் வீடு கையளிப்பு

சாவகச்சேரி,ஜூலை 3

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகின் பங்களிப்புடன் மட்டுவில் வடக்கு பிரிவில் அமைக்கப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான குடியிருப்பு நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக திறக்கப்பட்டது.

சமுர்த்தி திணைக்களத்தால் வீடமைப்புத் திட்டத்துக்கு என வழங்கப்பட்ட 6 லட்சம் ரூபா நிதியுடன், பயனாளி தனது பங்களிப்பாக மிகுதித் தொகையுடன் வீட்டை அமைத்திருந்தார் .

குறித்த வீடு கையளிப்பு நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் வி. விஸ்வரூபன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)



# கருவி அங்கத்தவர்களுக்கு உலருணவுப்பொதிகள்

கொடிகாமம்,ஜூலை 3

கருவி மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் அங்கத்தவர்களுக்கு உலர் உணவுப்பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

நீர்வேலி கருவி மாற்றுத்திறனாளிகளுக்கான சமூகவள அமைப்பின் ஆலோசகர் விஜயரத்தினம் யசோதாவின் மணிவிழாவை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

கருவி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு பொதிகளை வழங்கினார்.(ஐ-159)



# பஸ்ஸில் பயணித்த இளம்பெண் சாரதி, நடத்துநரால் துர்நடத்தை

கொழும்பு,ஜூலை 3

தனியார் பஸ்ஸொன்றில் பயணித்த 19 வயதுடைய இளம்பெண்ணை, பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் ஹொரவபத்தான பிரதேசத்தில் நடந்துள்ளது.

பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். குறித்த பஸ்ஸில் வேறு பயணிகள் இல்லாத சந்தர்ப்பத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திய இருவரும், குறித்த பெண்ணை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.(ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா வைரஸ் பரவலால் நாடு மீண்டும் முடங்கலாம்

கொழும்பு,ஜூலை 3

**இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட டெல்டா திரிபு வைரஸ் இலங்கையில் பல பிரதேசங்களில் பரவியிருக்கலாம் என்று அஞ்சப்படுவதால், மீண்டும் நாடு முடங்குவதற்கான வாய்ப்பு உள்ளது. அரச உயர் மட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்று அறிய முடிகின்றது.**



நாட்டின் பல பகுதிகளிலும் டெல்டா திரிபு வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பரவாதிருக்கும் நோக்கத்தில் முடக்கத்தை ஏற்படுத்த ஆராயப்படுகின்றது.

அதேவேளை தற்போதுள்ள தரவுகளைக்கொண்டு நாட்டின் கொரோனாத் தொற்று நிலைமைகளை மூடி மறைக்க நினைத்தாலும், அடுத்த இரண்டு வாரங்களின் பின்னர் நாட்டின் உண்மையான நிலைமை என்னவென்பது வெளிப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (ஒ,4)

## கிபிர் விமானங்களை புதுப்பிக்கிறது இலங்கை

கொழும்பு.ஜூலை 3

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் ரக (Kfir) தாக்குதல் விமானங்களைப் புதுப்பிப்பதற்காக, இஸ்ரேல் விமான நிறுவனமொன்றுடன் பாதுகாப்பு அமைச்சு கைச்சாத்திட்டுள்ளது.

50 மில்லியன் டொலர் செலவில் விமானங்களின் கட்டமைப்பு புதுப்பிக்கப்படவுள்ளதுடன், அவற்றுக்கு புதிய ரேடார், தொலைத்தொடர்பு வசதிகள் மற்றும் மறைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இதனைத் தவிர, இலங்கை விமானப் படை உறுப்பினர்களுக்கு, புதுப்பித்தல் தொடர்பான நிபுணத்துவப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஒ,4)



புங்குடுதீவு கடற்கரையில்

## உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியது கடலாமை

புங்குடுதீவு,ஜூலை 3

யாழ்ப்பாணம் புங்குடுதீவு, நடுத்துருத்தி கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த பகுதிக்கு வருகைதந்த அதிகாரிகள் கடலாமையை உடற்கூற்று பரிசோதனைக்காக எடுத்துச்சென்றனர்.

கரையொதுங்கிய குறித்த கடலாமை 38 இஞ்சி நீளமும், 27 இஞ்சி அகலமும் 76 இஞ்சி சுற்றளவும் கொண்டது என தெரிவிக்கப்பட்டது. (ஜ-20,26)

## மூன்று நாடுகள் கூட்டுப்பயிற்சி

கொழும்பு,ஜூலை 3

இலங்கை, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் கடற்படையினர் பங்கு கொண்ட நீர்வழி தயார் நிலை மற்றும் ஒத்துழைப்பு கூட்டுப்பயிற்சி நிறைவடைந்துள்ளது.

இந்த கூட்டுப் பயிற்சி கடந்த 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இலங்கையின் கிழக்குக் கரையோர கடல் பிராந்தியத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டுப் பயிற்சி கடற்படைகளுக்கு இடையிலான கடல்சார் தொடர்பு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் பங்காளி நாடுகளிடையே வலுவான கடல் கூட்டாண்மை ஆகியவற்றை பலப்படுத்த வழிவகுக்கும் என்று கடற்படை தெரிவித்துள்ளது. (ஒ,4)

## இலங்கை உள்ளிட்ட 13 நாடுகளுக்கு பயணத்தடை

கொழும்பு,ஜூலை 3



கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கை உட்பட 13 நாடுகளுக்கு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பயணத்தடை விதித்துள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், இலங்கை, வியட்நாம், நமீபியா, சாம்பியா, காங்கோ, உகாண்டா, சியரா லியோன், லைபீரியா, தென்னாபிரிக்கா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளுக்கே இவ்வாறு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பொது சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் இந்தத் தடை உத்தரவை அறிவித்துள்ளது. (ஒ,4)

## உரிமை ஆவணங்கள் இருந்தும் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகள்

முல்லைத்தீவு,ஜூலை 3

காணி உரிமை கோரும் ஆவணங்கள் இருந்தும் நீண்ட காலமாக தொடரும் காணிப் பிணக்குகளைத் தீர்த்து நிம்மதியான வாழ்வுக்கு வழிசெய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காணிப் பிணக்காளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகள் தொடர்பான ஊடக சந்திப்பு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன்போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட் டது.

நீண்ட காலமாக தமது காணிப் பிணக்குகள் தீர்க்கப்படவில்லை எனவும், நடமாடும் சேவைகளில் தீர்க்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவும் இல்லை எனவும் முறிகண்டி பிரதேச காணிப் பிணக்காளர்கள் தெரிவித்தனர்.

நீண்டகாலம் தீர்க்கப்படாத பிரச்சினையால் மன உளைச்சலுக்கு ஆளான தனது தந்தை மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என, தாய் மற்றும் சகோதரர் காணி இல்லாது சிரமங்களுடன் வாழ்கின்றனர் எனவும் இதன்போது பெண்ணொருவர் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 30க்கு மேற்பட்ட காணிப் பிணக்குகள் தீர்க்கப்படாமல் தேங்கிக் கிடக்கும் நிலையில், வீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட அரச சலுகைகள் இல்லாது பல குடும்பங்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-113)

## 70 வயதானோருக்கு விசேட அறிவிப்பு

கொழும்பு.ஜூலை 3

கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் 70 வயதுக்கு மேற்பட்ட, அஸ்ராஜெனகா முதற்கட்ட தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு விசேட அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முதலாவது தடுப்பூசி பெற்றவர்கள், இரண்டாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் மற்றும் முதற்கட்ட தடுப்பூசி பெற்றுக்கொண்டபோது வழங்கிய அட்டையின் புகைப்படம் என்பவற்றை epidunitcmc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கொழும்பு மாநகரசபையின் தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் தினுகா குருகே அறிவித்துள்ளார். (ஒ,4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மக்களின் காணிகள் மக்களுக்கே!

வலிகாமம் வடக்குப் பகுதியில் 'துரு மித்துரு நவ ரட்டக்' திட்டத்தின் கீழ் இராணுவத்தினர் தாம் பயிரிட்டு அறுவடைசெய்த பல நூறு கிலோ மிளகாய்களை சந்தைக்குக் கொண்டுவந்துள்ளனர். இதையொரு வீரதீரச் செயலாகவும் அவர்கள் வியாக்கியானம்செய்யத் தவறவில்லை. ஆனால், இது முழுக்க முழுக்க மக்களின் வயிற்றெரிச்சலை வாரிக்குவிக்கும் நடவடிக்கையே. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வலிகாமம் வடக்கில் மக்களின் பல நூறு ஏக்கர் விவசாயக் காணிகள் மற்றும் குடியிருப்புகள் தொடர்ந்தும் இராணுவத்தினரிடம் உள்ளன. 32 ஆண்டுகளாக தம் வாழ்விடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக வாழும் மக்கள், தமது நிலங்களில் மீண்டும் தம்மைக் குடியமர்த்த வேண்டும் என்று கடந்த 11 ஆண்டுகளாகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் எந்தப் பயனும் இல்லை. 'நல்லாட்சி' என்று தன்னை அடையாளப்படுத்திய மைத்திரி – ரணில் கூட்டு அரசின் காலத்தில்கூட இந்த விடுவிப்பு முழுமையாகச் சாத்தியப்படவில்லை. 'உயர் பாதுகாப்பு வலயம்' என்ற ஒற்றைச் சொல்லுக்குள் மக்களின் கனவுகளும் எதிர்காலமும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன.

தமது நிலங்களை, வாழ்வாதாரங்களை இராணுவத்தின் பிடியில் கொடுத்துவிட்டு மக்கள் அனுதினமும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கையில், மக்களின் காணிக்குள் ஏதோவொரு திட்டத்தைக் கொண்டுவந்து அதை இராணுவத்தினரே நடைமுறைப்படுத்தி, மக்களின் காணிக்குள் விவசாயத்தை மேற்கொண்டு காசாக்குவதை என்னவென்று சொல்வது.

வலிகாமம் வடக்குக்கு 'பொன் கொழிக்கும் பூமி' என்றும் பெயர். எதை விதைத்தாலும் அதை விளைவிக்கும் மண் என்றும் அதை அழைப்பர். அந்த மக்களுக்குத் தெரிந்ததெல்லாம் விவசாயம்தான். இவ்வாறிருக்கையில் அவர்களின் பொருளாதாரத்தை – வாழ்வின் பெரும் பலத்தை பறித்தெடுத்து அதனால் தாம் அனுபவிக்கும் இலாபங்களை தம்பட்டம் காட்டுவதெல்லாம் உண்மையில் உச்சக்கட்ட வஞ்சம்.

போரால் சிதைவடைந்த வலிகாமம் வடக்கு மக்களின் பொருளாதாரம் மீண்டும் புத்துயிர்ப்பு பெறுவதற்கு இந்த விவசாய பூமி முதுகெலும்பு போன்றது. அதை உரிய முறையில் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு இதய சுத்தியுடன் நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும். விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர், நாட்டிலிருந்து பயங்கரவாதம் முழுமையாகத் துடைத்தெறியப்பட்டு விட்டது என்றெல்லாம் வாய்ச்சவடால் விடும் அரசு, இல்லாத பயங்கரவாதத்தில் எதற்காக உயர் பாதுகாப்பு வலயம் என்பதை கொஞ்சம் தெளிவுபடுத்த வேண்டும்.

அவ்வாறு உயர்பாதுகாப்பு வலயங்களை விடுவிக்க வாய்ப்பே இல்லை என்றாலும், குறைந்த பட்சம் சிறப்பு அனுமதியுடன் உரிய பொறிமுறைகளுடன் மக்கள் தம் நிலங்களுக்குச் சென்று (இராணுவப் பாதுகாப்புடன்), விவசாய நடவடிக்கைகளை செய்துவிட்டுத் திரும்பவாவது வாய்ப்புக்களை வழங்க அரசும் இராணுவமும் பரிசீலனைகளை மேற்கொள்ள வேண்டும். விவசாய நடவடிக்கைகளுக்கு வழங்கும் குறைந்தபட்ச அனுமதியாவது அந்த மக்களின் நீண்டநாள் காயத்தை ஓரளவேனும் ஆற்றுப்படுத்தும், மருந்திடும்.

இராணுவத்தின் வேலை நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே தவிர விவசாயம் அல்ல. அதிலும் குறிப்பாக பொதுமக்களின் காணிகளை அடாத்தாக கபளீகரம்செய்து மேற்கொள்ளும் விவசாயத்தை இராணுவத்தினருக்கு உகந்த நடவடிக்கையாகக் கொள்ள முடியாது. விவசாயம் செய்வதையும் அதன்மூலம் தன்னிறைவுப் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதையும் இராணுவம் விரும்புகின்றதெனில் அதற்கு அரச காணிகள் ஏராளமானவை உள்ளன. தேடுவாரற்று ஏராளமான கட்டாந்தரைகள் உள்ளன. நாட்டின் தெற்குப் பகுதிகளில் இன்னும் விசாலமான அரச காணிகள் உள்ளன. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு வலிகாமம் வடக்கில் எதற்காக இந்த ஓரவஞ்சனை?.




# ஜூன் மாதத்தில் பதிவான அதிகளவான இறப்புக்கள்

## காரணம் கண்டறிய குழு நியமிப்பு

**கொழும்பு, ஜூலை 3**

**நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தாலும், மறுபுறம் சுமார் 45 இறப்புக்கள் நாளாந்தம் பதிவாகி வருகின்றன. ஜூன் மாதத்தில் திடீரென இறப்புக்கள் அதிகரித்துள்ளமைக்கான காரணம் தொடர்பில் துரிதமாகக் கண்டறிவதற்கு விசேட மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவிக்கையில்,

புத்தாண்டுக் கொத்தணி என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளமைக்கமைய ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 468 கொரோனா இறப்புக்கள் பதிவாகியுள்ளன. பிரிட்டன் வைரஸான அல்பா நாட்டில் இனங்காணப்பட்ட பின்னரே இறப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தநிலையில் ஏப்ரல் மாதம் 110 இறப்புக்களும், மே மாதம் 806 இறப்புக்களும், ஜூன் மாதம் ஆயிரத்து 500 இறப்புக்களும் பதிவாகியுள்ளன. அதனடிப்படையில் ஜூன் மாதத்தில் அதிகளவு இறப்புக்கள் பதிவாகியுள்ளன. இதற்கான காரணங்களை அறிவதற்காகவே விசேட நிபுணர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்திய வைரஸான டெல்டா பரவலும் நாட்டில் இனங்காணப்பட்டுள்ளது. அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் மக்கள் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ஒ.4)

# எதிர்பாராது உயிரிழப்பவர்களுக்கு கட்டாயம் பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு,ஜூலை 3

எதிர்பாராத விதமாக உயிரிழக்கும் நபருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தால், அவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்பவர்களுக்கு தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. இது சமூகப் பரவலுக்கு வழி வகுக்கும். எனவே அவர்களுக்கு கட்டாயம் பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

வீட்டிலேயே உயிரிழக்கும் நபரொருவரின் குடும்பத்தாருக்கு கொரோனாத் தொற்று இல்லையெனில், குறித்த நபர் தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் அல்லது தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் வசிப்பவராக இல்லாவிட்டாலும், அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். 24 மணித்தியாலங்களுக்குள் இறுதிக்கிரியைகளை முன்னெடுக்கவும் வாய்ப்பளிக்கப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



இந்த நிலையில் உயிரிழப்பவர்களின் சடலங்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தாது உறவினர்களிடம் கையளிப்பது ஆபத்தானது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் கடும் வெப்பம் 500க்கு மேற்பட்டோர் பலி!



**ஒட்டாவா, ஜூலை 3**

**கனடாவில் தற்போது வரலாறு காணாத வெப்பம் நிலவுகின்றது. சில இடங்களில் 49.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. இந்த அதிகரித்த வெப்பத்தால் அங்கு கடந்த ஒரு வாரத்துக்குள் 500க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.**

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில்தான் இந்த பேரிடரின் தாக்கம் அதிகம் உள்ளது. வெப்பம் மட்டுமல்லாமல் வெப்ப அலைகளும் பிரிட்டிஷ்கொலம்பியாவை அதிகம் தாக்கியுள்ளன. இவை இரண்டும்தான் இந்தப் பேரிடருக்கு முக்கிய காரணம் என்று கனேடிய வான்வெளி ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.



வெப்ப அலையையும் கடும் வெப்பத்தையும் சமாளிக்கும் வகையில் வீதிகளிலும் பொது இடங்களிலும் தண்ணீரை விசிறும் கருவிகள் அங்கு பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கருவிகளின் உதவியுடன் மக்கள் தம் உடல் வெப்பநிலையை ஓரளவு பராமரித்து வருகின்றனர். குளங்கள் மற்றும் கடற்பரப்புகள் நோக்கி மக்கள் படையெடுப்பது அங்கு அதிகமாகியுள்ளது.

புவியின் தட்பவெப்ப நிலை அதிகரிப்பால் வெப்ப அலைகளை அடுத்தடுத்த வருடங்களில் ஐரோப்பா எதிர்கொள்ளும் என்று கடந்த வருடம் எச்சரிக்கப்பட்டிருந்த நிலையில் கனடாவில் இருந்து ஆரம்பித்துள்ளது அந்தத் தாக்கம். (ம)



## உறக்கம் கலைத்தது தால்: பல்லாயிரம் மக்கள் ஓட்டம்

யகார்தா, ஜூலை 3

பிலிப்பைன்ஸில் மிகவும் உயிர்ப்புடன் உள்ள எரிமலைகளில் ஒன்றான தால் எரிமலை நேற்றுமுன்தினம் முதல் சீற்றமடைந்த நிலையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அவசர அவசரமாக தம் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் இந்த எரிமலை வெடித்துச் சிதறியபோது பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. லாவா குழம்புச் சிதறல்களால் சிலர் உயிரிழந்தனர். இந்த நிலையில் மீண்டும் அந்த எரிமலை வெடிக்க ஆரம்பித்துள்ளமை பல அச்சப்பாடுகளை அங்கு தோற்றுவித்துள்ளது. சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ம)

## ஜூமாவுக்குச் சிறை

ஜோகன்ஸ்பேர்க், ஜூலை 3

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபரான ஜேக்கம் ஜூமாவுக்கு நீதிமன்ற அவமதிப்புக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்தவர் ஜேக்கப் ஜூமா. இவர் தனது 9 ஆண்டு கால பதவிக் காலத்தில் பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டார் என்று குற்றச்சாட்டுகள் எழுந்தன.

ஜேக்கப் ஜூமா தன் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை மறுத்த போதும் ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி அவரை பதவி விலக வலியுறுத்தியது. இதையடுத்து 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜேக்கப் ஜூமா பதவி விலகினார்.

அதனைத் தொடர்ந்து அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

எனினும் வழக்கு விசாரணைக்காக ஜூமா நீதிமன்றத்துக்குச் செல்லவில்லை. இதையடுத்து நீதிமன்ற அவமதிப்புக்காக அவருக்கு 15 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## டயானாவுக்கு சிலை!

லண்டன், ஜூலை 3

பிரிட்டனின் முன்னாள் இளவரசி டயானாவுக்கு லண்டன் அரண்மனையில் சிலை வைக்கப்பட்டுள்ளது. டயானாவின் புதல்வர்களான இளவரசர் வில்லியம் மற்றும் ஹரி ஆகியோர் இணைந்து சிலையைத் திறந்து வைத்தனர்.

உலகம் முழுவதும் அனைத்து தரப்பினராலும் விரும்பப்பட்டவர் பிரிட்டிஷ் இளவரசி டயானா. இளவரசர் சாள்ஸை காதலித்து திருமணம் செய்த அவர், ராஜ குடும்பத்தின் உறுப்பினராக ஆனபோதும், தனது நிலையில் இருந்து மாறாமல் இருந்தார். அரச குடும்பத்தினர் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற மரபுகளை புறந்தள்ளிய டயானா, தனக்கென்று ஒரு தனி அடையாளத்தை உருவாக்கியவர். டயானா கார் விபத்தில் இறந்து 23 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அவரது மகன்களான இளவரசர்கள் வில்லியம், ஹாரி இருவரும் தமது தாயாரின் 60ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்குச் சிலை வைத்துள்ளனர். (ம)






கொரொனாவைக் கட்டுப்படுத்த

# 10 வீதமான மக்களுக்கு தடுப்பூசியை ஏற்றுங்கள்!

### உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

வொஷிங்டன், ஜூலை 3

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் ஒவ்வொரு நாடும் குறைந்த பட்சம் தங்கள் மக்கள் தொகையில் 10 வீதமானோருக்குத் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம்கெப்ரியேசஸ் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளவில் தடுப்பூசி செலுத்துவதிலும், கிடைப்பதிலும் பெரும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. சில வளர்ந்த நாடுகளில் உள்ள மக்களுக்கு அதிகமான பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. ஆனால் பல ஏழை நாடுகளில் உள்ள மக்களுக்கு தடுப்பூசிகள் இன்னும் கிடைக்கவே இல்லை. அங்குள்ள முன்களப் பணியாளர்களான மருத்துவர்கள், செவிலியர்கள், முதியோர் உள்ளிட்ட எளிதில் பாதிப்புக்கு ஆளாகும் மக்களுக்குக்கூட தடுப்பூசி கிடைக்க வில்லை. சில நாடுகள் இன்னும் தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்தாமல் இருப்பது அந்த நாட்டுக்கு மட்டுமல்ல மற்ற நாடுகளுக்கும் அது ஆபத்தை ஏற்படுத்தும். ஆதலால், வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் ஒவ்வொரு நாடும் தங்கள் மக்கள் தொகையில் குறைந்த பட்சம் 10 சதவீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்தி முடித்தால்தான் ஓரளவுக்கேனும் கொரோனாவைக் கட்டுப்படுத்தலாம்.

இந்த ஆண்டு இறுதிக்குள் 40 சதவீத மக்களுக்கும், அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் 70 சதவீதம் மக்களுக்கும் தடுப்பூசி செலுத்தி முடிப்பதுதான் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தவும், உலகப் பொருளாதாரத்தை மீண்டும் வளர்ச்சிப்பாதைக்குக் கொண்டு வரவும் சிறந்த வழி. ஒவ்வொரு இடத்திலும் கொரோனா தொற்றை முடிவுக்கு கொண்டுவரும் வரை, எந்த இடத்திலும் நம்மால் தொற்றை ஒழிக்க முடியாது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு பலமாக சீனா

## சீனத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 3

சீனாவும், இலங்கையும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று ஆதரவாகவும், பக்கபலமாகவும் செயற்பட்டு வந்துள்ளன. தற்போதும் பல்வேறு சவால்கள் காணப்படும் நிலையில், அதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமை மேலும் வலுப்படுத்தப்படும் என்று சீனத் தூதரகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டு 100 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு, இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அதன் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

உலகின் அமைதிக்கும், அபிவிருத்திக்கும் பெருமளவில் பங்களிப்புச்செய்யக்கூடிய நாடாக சீனா சிறந்த முறையில் வழி நடத்திச் செல்கின்றது. கடந்த 100 வருடங்கள் சுதந்திரத்துக்காகவும், இறையாண்மைக்காகவும் போராடிய தருணங்களிலும் ஒற்றுமையையும், சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட சந்தர்ப்பங்களிலும் சீனாவும், இலங்கையும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று ஆதரவாகவும், பக்கபலமாகவும் துணைநின்று செயற்பட்டு வந்துள்ளன.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைத்திருப்பும், சீன இலங்கை நட்புறவும் நெடுங்காலத்துக்குத் தொடர வேண்டும் - என்றுள்ளது.

அதேவேளை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஸென்ஹொங் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். 132 பக்கங்களைக் கொண்ட விசேட பத்திரிகை இணைப்பொன்று வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

# ஆதாரங்கள் இல்லையெனில் அஹ்னாப்பை விடுவிக்குக

## மன்னிப்புச்சபை மீண்டும் வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 3

**பயங்கரவாத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கவிஞரும், ஆசிரியருமான அஹ்னாப் ஜசீமுக்கு எதிரான ஆதாரங்கள் எவையும் இல்லாதவிடத்து, அவர் உடனடியாக விடுதலைசெய்யப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.**

இத தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் யாமினி மிஷ்ரா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி ஜகத் பாலசூரியவுக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எவ்வித குற்றச்சாட்டுக்களோ அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரங்களோ இல்லாமல், அஹ்னாப் ஜசீம் 400 நாள்களுக்கும் அதிகமான காலம் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இது நியாயமான முறையில் வழக்கு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதற்கான அவரது உரிமையைப் புறக்கணிக்கின்றது. அஹ்னாப் ஜசீம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியில் மிகவும் மோசமான, மனிதாபிமானமற்ற வகையில் அவர் நடாத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. சட்ட உதவியை நாடுவதற்கும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி அஹ்னாப் ஜசீமுக்கும், அவரது சட்டத்தரணிகளுக்கும் இடையிலான உரையாடல்கள் அதிகாரிகளால் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. பல நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அஹ்னாப் ஜசீம், அவரது குடும்பத்தார் மற்றும் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கும் நிலையில், அவரது உடல்நலன் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் அவரது குடும்பத்தினர் பெரிதும் அச்ச மடைந்துள்ளனர். இது அவரது உரிமைகளை மீறும் செயற்பாடு மாத்திரமல்ல, மாறாக நாட்டின் அரசமைப்புக்கு முற்றிலும் முரணானதாகும். தற்போது நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் சீரான சட்டத்திருத்தங்கள் மூலம் மறுசீரமைப்பு செய்யப்படும் வரையில் அதன்கீழ் புதிதாக கைது நடவடிக்கைகளை முன்னெடுப்பதைத் தவிர்ப்பது குறித்து செயற்றிட்டமொன்றை வகுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார். எனவே அஹ்னாப் ஜசீமின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விரைந்து நட வடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஒ.4)

# தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் கப்பலின் இலங்கைப் பிரதிநிதிக்கு பிணை



கொழும்பு,ஜூலை 3

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் உள்நாட்டு பிரதிநிதியான சீ கன்சோடியம் தனியார் நிறுவனத்தின் உதவிப் பொது முகாமையாளர் சஞ்ஜீவ லங்காபிரிய சமரநாயக்க பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு மேல்நீதிமன்றில் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபராக பெயரிடப்பட்ட சஞ்ஜீவ சமரநாயக்க சார்பில் மன்றில் முன்னிலையாகிய ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட சந்தேகநபருக்கு பிணை கோரினார்.

இதனையடுத்து சந்தேகநபரை ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 10 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணைகளில் செல்ல அனுமதித்த நீதிபதி, அவரது வெளிநாட்டு பயணத்தையும் தடைசெய்தார்.

அத்துடன் வழக்கில் ஏற்கனவே சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ள கப்பல் கப்டன் ரஷ்யப் பிரஜை டியூட் காலோ விட்டெலி, கப்பலின் உள்நாட்டுப் பிரதிநிதி நிறுவனமான சீ கன்சோர்ட்டியம் தனியார் நிறுவனத் தலைவர் அர்ஜுன ஹெட்டி ஆராச்சி மற்றும் பணிப்பாளர்களான அமிந்த ஹெட்டி ஆராச்சி, பண்டுல வீரசேகர ஆகியோர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும்16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ.4)**



# சௌக்கிய வார நிகழ்ச்சித்திட்டம் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை 3

நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சௌக்கிய வார தேசிய நிகழ்ச்சித்திட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை சௌக்கிய வாரம் தேசிய நிகழ்ச்சித்திட்டமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது. நாடளாவிய ரீதியில் 2 லட்சம் நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் தேசிய வேலைத்திட்டமாக குறித்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் கிளிநொச்சி பிரமந்தனாறு பிரதேசத்தில் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளர் வை.தவநாதன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 240 பேர் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், நேற்றைய தினம் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவித் தொகை வழங்கிவைக்கப்பட்டது.

மேலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான சிப்தொற புலமைப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன என்று கண்டாவளை பிரதேச செயலர் த.பிருந்தாகரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமுர்த்தி பயனாளிகளுக்கான இலவச மின்சாரம் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டமும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஐ-6)

# போலியான குற்றச்சாட்டுக்களால் அரசைப் பலவீனப்படுத்த முடியாது

## மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை 3

குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு எதிர்த் தரப்பினர் அரசின் மீது போலியான குற்றச்சாட் டுக்களை முன்வைக் கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் அரசைப் பலவீனப்படுத்த முடியாது. நெருக்கடியான நிலையில் சேவையாற்றினால் அதன் பிரதிபலன் நாட்டுக்கு நிச்சயம் கிடைக்கும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற '500 சுபீட்சமான உற்பத்திக் கிராமம் ' செயற்றிட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்தி வழங்கல் ஊடாக மாத்திரம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியாது. சுய தொழில் ஊடாக அவர்கள் வாழும் சூழலில் இருந்து சுயமாக முன்னேற்றமடையும் திட்டங்களை அரசு செயற்படுத்த வேண்டும். சுபீட்சமான உற்பத்திக் கிராமம் அவ்வாறான நோக்கத்தின் அடிப்படையில் செயற்றிட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 வைரஸ் தாக்கம் பூகோள மட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அனைத்துத் துறைகளும் ஒப்பபீட்டளவில் பாதித்துள்ளன. இந்த நெருக்கடிகளை வெற்றிக் கொள்ள அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதே தற்போதைய பிரதான இலக்காகும் இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமிக்கு மறுவாழ்வு வழங்குவதற்குத் தயார்

## நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 3

**பாலியல் தொழிலுக்காக இணையம் மூலம் பலருக்கு விற்பனை செய்யப்பட்ட சிறுமியின் உடல், உள ரீதியான பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு, அவரை ஆற்றுப்படுத்துவதற்காக எதிர்வரும் க.பொ.த. சாதரண தரப் பரீட்சைக்கு தோற்ற வாய்ப்பளிக்கப்படும் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.**

கல்கிஸைப் பகுதியில் வாடகைக்கு பெறப்பட்ட அறையொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 வயது சிறுமி ஒருவர், இணையத் தளமூடாக பாலியல் தொழிலுக் காக விற்பனைசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் மிஹிந்தலை பிரதேச சபையின் உப தலைவர் உள்ளிட்ட 21 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரான மிஹிந்தலை பிரதேச சபையின் உபதலைவர் நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது பிரதேச சபை உப தலைவர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி டெனி பெர்னாண்டோ, தனது சேவை பெறுநர், குறித்த திகதியில் குறித்த ஹொட்டல் அறையில் தங்கியுள்ளார். எனினும் அவர் சிறுமியை சட்ட ரீதியாக பாதுகாப்பிலிருந்து கடத்தவில்லை. அறைக்கு அழைத்துவரப்பட்ட சிறுமியிடம் பாலியல் ரீதியில் உறவுவைக்கவில்லை. அவர் கடந்த இரண்டு வருடங்களாக பாலியல் பலவீனத்துக்கு சிகிச்சைபெற்று வருகின்றார் என்று குறிப்பிட்டார். எவ்வாறாயினும் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் லோச்சனீ அபேவிக்ரம, சந்தேகநபரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதனிடையே திறந்த மன்றில் நீதிவான் லோச்சனி அபேவிக்ரம பாதிக்கப்பட்ட சிறுமி தொடர்பில் விடயங்களை முன்வைத்தார். ' குறித்த சிறுமி, பல்வேறு நபர்களால் பல்வேறு முறைகளில் பாலியல் நடவடிக்கைகளுக்கு மிக மோசமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளார். போசனை இன்றி, மானசீக ரீதியிலும், உடலளவிலும் அவர் மிகவும் சோர்வடைந்துள்ளார். சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பது போன்று, சிறுமியை பழைய நிலைக்கு அழைத்துவருவதும், மீட்பதும் மிக முக்கியமாகும். அவர் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல ஆசைப்படுகிறார். அவருக்கு உடல் மற்றும் மானசீக சிகிச்சைகள் வட கொழும்பு போதனா மருத்துவமனை ஊடாக வழங்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

சிறுமியை சட்ட ரீதியிலான பாதுகாப்பிலிருந்து கடத்தவும், பாலியல் துஸ்பிரயோகம் செய்யவும் உதவி ஒத்தாசை வழங்கியமைக்காக குறித்த விளம்பரத்தைப் பிரசுரித்த இணையத்துக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கை என்ன என்று நீதிவான் பொலிஸாரிடம் வினவினார். இது தொடர்பில் சி.ஐ.டி.யின் ஒத்துழைப்புடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அது குறித்து பொறுப்புக் கூற வேண்டியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்று பொலிஸார் பதிலளித்தனர்.

(ஒ-4)

# 36 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

சாவகச்சேரி,ஜூலை 3

சௌக்கிய வார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்தில் 36 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கினார். (ஐ-9)



# தென்கடலில் நில அதிர்வு

கொழும்பு,ஜூலை 3.

இலங்கையின் தெற்குக் கடற்பகுதியில் நேற்று நில அதிர்வு பதிவாகியுள்ளது. காலியில் இருந்து 766 கிலோ மீற்றர் தூரத்தில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் உள்ள கடற்பகுதியில் நில அதிர்வு பதிவாகியுள்ளது.

எனினும் சுனாமி ஏற்படுவதற்கான எந்தவொரு வாய்ப்புகளும் இல்லை என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(ஒ.4)

# மேலும் சில பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூலை 3



உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மேலும் சில பிரதேசங்கள் நேற்றுக் காலை 6 மணியுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக கம்பஹா மாவட்டத்தில் யடிஹேன கிராம அலுவலர் பிரிவில் பொல்ஹேன வீதி, லேக்வ்ச் வீதி மற்றும் முதலீட்டு வலைய பாரோ வெவ வீதிக்கு திரும்பும் பகுதி ஆகியவையும், சியம்பலாபெவத்த கிராம அலுவலர் பிரிவில் தேவால வீதி, ஆரியதாச விதானகே மாவத்தை, ஆரியதாச விதானகே மாவத்தை நிறைவுறும் பகுதி மற்றும் சியம்பாபெவத்த கந்துகொட வீதி ஆகியவையும், மாத்தளை மாவட்டத்தில் தெமதஓய பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# வெளிநாடுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு தடுப்பூசி

கொழும்பு,ஜூலை 3

உயர்கல்வி நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே தடுப்பூசியைப் பெற விரும்பும் மாணவர்கள், கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் இணைய



முகவரிக்கு பிரவேசித்து ( www.army.lk/covid19) VACCINATION STUDENTS என்பதை ஐ அழுத்தி பதிவு செய்ய முடியும்.

மாணவர்கள் பதிவுசெய்து இரண்டு நாள்களுக்குள் தடுப்பூசி பெறுவதற்கான திகதி, நேரம் மற்றும் தொடர்புடைய தடுப்பூசி மையம் தொடர்பான தகவல்கள் அவர்களுக்கு, குறுஞ்செய்தி மூலமாக அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# பேர்ள் கப்பல் விவகாரத்தை திசை திருப்ப முயலாதீர்கள்

## முழுமையான விசாரணை அவசியம் என்கிறார் சோபித தேரர்

கொழும்பு,ஜூலை 3

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றியதால், சுற்றுச்சூழல் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. எனவே இந்த விவகாரத்தை திசை திருப்ப எவரும் முயற்சிக்க வேண்டாம். முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். நாடு பேரழிவுக்கு ஆளான ஒரு நேரத்தில் கடல் விலங்குகளின் இறப்பு இயற்கைக் காரணங்களால் ஏற்பட்டது என்று இவர் தெரிவித்துள்ளார் சம்பவத்தின் பின்னணியில் உள்ள உண்மையைத் தீர்மானிக்க முயற்சித்து வருகையில் இவர் இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து நபர்கள் மற்றும் பொதுமக்களை தவறாக வழிநடத்துபவர்கள் அனைவரும் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டும். விசாரணைகளுக்கு இடையூறு செய்பவர்கள் மற்றும் சம்பவத்துக்கு ஆதரவாகப் பேசுவபவர்கள் ஆகியோர் பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டும் - என்றார். (ஒ.4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மில்லியன் சைனோ.ஃ.போர்ம் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைவு

கொழும்பு,ஜூலை 3

சீனாவில் இருந்து இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவுசெய்யப்பட்ட மேலும் ஒரு மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தன.




இதேவேளை மேலும் ஒரு மில்லியன் தடுப்பூசிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கைக்குக் கொண்டுவரப்படும். அத்துடன் 78 ஆயிரம் டோஸ் பைசர் தடுப்பூசி எதிர்வரும் திங்கட்கிழமை கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.4)

# மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புக்கள்

பளை,ஜூலை 3

பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேச பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீள்குடியமர்ந்த 25 குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புக்கள் மற்றும் மலசுடங்கள் என்பவை அமைக்கப்படவுள்ளன.

வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் 17 குடும்பங்களும் இத்தாவில் மற்றும் முகமாலை ஆகிய பிரிவுகளில் 8 குடும்பங்களும் இதில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

நிறுவனத்தினர் மீள்குடியமர்ந்த பல குடும்பங்களுக்கு மலகூட வசதிகள் இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம் முறையிட்டதையடுத்து பிரதேச செயலரின் ஏற்பாட்டில் றஹமா நிறுவனத்தினரால் இவை அமைக்கப்படவுள்ளன. (ஐ-9)

# பயங்கரவாதத் தடைச்சட்டம்: சில விதிகள் மறுபரிசீலனை

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தற்போதுள்ள சட்டங்களை ஆய்வு செய்து, தேவையற்ற விதிகளை அகற்றி, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அறிவித்துள்ளது.**

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை இலங்கைக்குத் தொடர்ந்து வழங்குவதெனில், கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென்ற நிபந்தனையை இலங்கைக்கு விதிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியது.

இதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸை நிறுத்தினால் மாற்று நடவடிக்கை என்ன செய்வதென்பது எமக்குத் தெரியும் என்று குறிப்பிட்டு, நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் பச்சைக் கொடியை காண்பிக்கும் கடிதத்தை இலங்கை அனுப்பியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளாய்வுசெய்து, புதிய பரிந்துரைகளை முன்வைக்க அமைச்சரவை கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி அன்று எடுத்த முடிவெடுத்தது. அதற்கமைவாக அமைச்சரவை உபகுழு மற்றும் அதிகாரிகள்மட்டக் குழுவை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. இந்தக் குழு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மதிப்பாய்வுசெய்து, மூன்று மாதங்களுக்குள் அமைச்சரவையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

நீதி அமைச்சின் மூத்த பிரதிநிதித்துவத்துடன், பாதுகாப்பு, வெளியுறவு, பொதுப்பாதுகாப்பு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைவுத்துறை, பொலிஸ் துறை மற்றும் தேசிய புலனாய்வுத் தலைவர் அலுவலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

அதேவேளை அரசமைப்பின் பிரிவு 34 இன் படி தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக சிறையில் வைக்கப்பட்ட 16 முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கடந்த மாதம் 24 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.4)





# மாணவர்களுக்கு பென்ரைவ் கையளிப்பு

சாவகச்சேரி,ஜூலை 3

மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கற்கும் மாணவர்கள் 25 பேருக்கு இலகுவாக கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளும் வகையில் பென்ரைவ் வழங்கப்பட்டது.

வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆஸ்திரேலியாவில் உள்ள நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்ட சுயமாகக் கற்றலில் ஈடுபடக்கூடிய பென்ரைவ் வழங்கப்பட்டன என்று பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார். (ஐ-9)



# 325 பேர் கைது

கொழும்பு,ஜூலை 3

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் அதிகாலை 6 மணியிலிருந்து நேற்று அதிகாலை 6 மணி வரையான 24 மணி நேரத்தில் 325 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை இதே குற்றச்சாட்டுக்களுக்காக 46 ஆயிரத்து 260 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேல் மாகாணத்துக்குள் உள்நுழையும், வெளியேறும் 14 இடங்களில் மூவாயிரத்து 337 வாகனங்கள் நேற்று மட்டும் சோதனை செய்யப்பட்டன. அதனடிப்படையில் அத்தியாவசிய தேவையின்றி மாகாண எல்லையைக் கடக்க முயன்ற 75 வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ.4)

# வெளிநாட்டவர்களுக்கு அதிவிசேட வர்த்தமானி

கொழும்பு,ஜூலை 3

வெளிநாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கையில் தங்கியிருப்பவர்களுக்கு வழங்கப்படும் புலம்பெயர் கொடுப்பனவை, அவர்களின் நாட்டுக்கு அனுப்பி வைப்பதை மட்டுப்படுத்துவதற்கு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ச இந்த அதிவிசேட வர்த்தமானி அறிப்பை வெளியிட்டுள்ளார். (ஒ.4)

# அஹ்னாப் ஜசீமால் சிறையிலும் சிக்கல்

## நீதிமன்றுக்கு அறிக்கை

கொழும்பு,ஜூலை 3

அஹ்னாப் ஜசீம் தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புகளைப் பேணியவர். எனவே அவரை ஏனைய சிறைக் கைதிகளிலிடமிருந்து தனிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் சிறையில் உள்ள ஏனைய கைதிகளுக்கு அடிப்படைவாதத்தைப் போதிக்கக்கூடும் என்று விசாரணையாளர்கள் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் அஹ்னாப் ஜஸீமை தடுப்புக் காவல் விசாரணையின் பின்னர், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும்போது, அவர் தொடர்பில் விசாரணைசெய்யப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிவானுக்கு அறிக்கை ஊடாக அறிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில், உலகளாவிய ரீதியில் குறிப்பாக மியன்மார், சிரியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் முஸ்லிம்களுக்கு ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டால் அதற்கெதிராகப் போராட வேண்டும் என்று கூறி ஐ.எஸ் அமைப்பு மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய காணொளிகளை மாணவர்களுக்கு இவர் காண்பித்துள்ளார். மதத்துக்காகப் போராடினால் சொர்க்கத்துக்கும் செல்லமுடியும் என்றும் இவர் கூறியுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேற்குலக நாடுகளுக்கு அடிபணியமாட்டோம்!

## அரச தரப்பு இறுமாப்பு



கொழும்பு,ஜூலை 3

**அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கு இலங்கை ஒருபோதும் அடிபணியாது. அதே போன்று அச்சத்தால் தீர்மானங்களும் எடுக்கப்படமாட்டாது என்று இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.**

தூக்குத் தண்டனைக் கைதியான துமிந்த சில்வா, ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலைசெய்யப்பட்டமை தொடர்பில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமெரிக்கத் தூதுவரால் சவாலுக்குட்படுத்த முடியுமா? இந்த விடயத்தில் வெளிவிவகார அமைச்சு ஏன் இன்னும் தலையீடுசெய்யவில்லை என்று எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் இலங்கையின் உள் விவகாரத்தில் தலையிடும் முதல் சந்தர்ப்பம் இதுவல்ல. இறுதிக்கட்டப் போரின் கடைசிக் கட்டத்தில் கூட அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் அழுத்தங்களுக்கு நாம் அச்சப்படவில்லை.

இலங்கை சுதந்திர நாடாகும். 1948 ஆம் ஆண்டில் எமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. எனவே எந்த நாடும் இரும்புப் பாதங்களால் எம்மை நசுக்குவதற்கு முற்படக்கூடாது. அதேபோன்று இலங்கை அச்சத்தால் முடிவு எடுக்கும் நாடும் அல்ல. துமிந்த சில்வாவுக்கு கடந்த ஆட்சியின்போது அநீதி இழைக்கப்பட்டிருந்தது. அந்த அநீதி தற்போது சரி செய்யப்பட்டுள்ளது.

துமிந்த சில்வா, பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவுக்கிடையிலான மோதலின்போது பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவே முதலாவதாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். அதன் பின்னர் துமிந்தவை பாதுகாக்கவே அவரது மெய்ப்பாதுகாவலர்கள் சூடு நடத்தியுள்ளனர். இந்தக் குற்றத்துக்காக துமிந்தவுக்கு 3 மாதங்கள் வரையே தண்டனை வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஹிருணிக்கா மற்றும் அவரின் தாய் ஆகியோரைத் திருப்திப்படுத்தவே துமிந்த சில்வா சிறைக்கு அனுப்பப்பட்டார். திட்டமிட்ட அடிப்படையில் தண்டிக்கப்பட்டார். வெளியான குரல் பதிவு மூலம் இது அம்பலமானது. எனவே, முதுகெலும்புள்ள தலைவர் என்ற அடிப்படையில் இந்த விடயத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சிறந்த முடிவை எடுத்துள்ளார் - என்றார். (ஒ,4,44)



## வான் பகுதியை சீரமையுங்கள்

### மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,ஜூலை 3

முல்லைத்தீவு கோட்டை கட்டிய குளத்தின் அணைக்கட்டை உயர்த்தி வான் பகுதியை சீரமைத்துத் தருமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

இக் குளத்தை நம்பி 200 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் குளத்துக்கு வருகின்ற பெருமளவான நீர் வான் வழியாக வெளியேறுகின்றதன் காரணமாக சிறுபோக நெற்செய்கையை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை.

எனவே குளத்தின் அணைக்கட்டை உயர்த்தி வான் பகுதியை சீரமைப்பதன் மூலம் குளத்தில் கூடுதலான நீரைச் சேமிக்க முடியும்.

மழை காலங்களில் ஐந்து நாள்கள் வரை அம்பலப் பெருமாள்குளம் வீதி வழியாக பயணம் மேற்கொள்ள முடியாத அளவுக்கு கோட்டை கட்டிய குளத்தின் வான் வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்கின்றது

இந்த நிலையில் குறித்த தாழ்பாலத்தை மேம்பாலமாக மாற்றுவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)


## தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு

சாவகச்சேரி,ஜூலை 3

தென்மராட்சி பிரதேசத்தில் சமுர்த்தி சிப்தொற கல்வி ஊக்குவிப்பு செயற்றிட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட க.பொ.த.உயர்தர வகுப்புகளில் இணைந்த மாணவர்களுக்கு நிலுவையுடன் கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப். பரீட்சையில் சித்தி பெற்று உயர்தர வகுப்புகளில் இணைந்து கற்கும் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கடந்த செப்ரம்பர் மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையான காலப் பகுதியில் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்படவுள்ளது.

தற்போது கொரோனா அச்சம் காரணமாக பாடசாலைகள் இயங்காத நிலையில் அந்தந்த பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு சமுர்த்தி வங்கிகள் ஊடாக கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)




## காணிப்பிணக்குகளை தீர்த்துவையுங்கள்

### மாந்தை கிழக்கு மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்

முல்லைத்தீவு,ஜூலை 3

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் காணிப்பிணக்குகள் தொடர்பில் சரியான நடவடிக்கையை அரச அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மக்களின் காணிப்பிணக்குக்ள் பல தீர்த்துவைக்கப்படாத நிலையில் அரச காணிகள் பல வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும், வசதி படைத்தவர்களுக்கும் குத்தகைக்கு வழங்கப்படுவதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

"மக்களின் நிலைமையை புரிந்துகொள்ளுங்கள் அரச அதிகாரிகளே,மாவட்ட அதிகாரிகளே மாவட்டம் முழுதும் கடமையாற்றுங்கள்,மாகாணசபை வளாகம் தான் உங்கள் கடமை வாளாகமா? வடமாகாண அதிகாரிகளே 5 மாவட்டத்திலும் கடமையாற்றுங்கள், விற்காதே விற்காதே லீசிங் அடிப்படையில் விற்காதே,தடுக்காதே தடுக்காதே விவசாய நிலங்களின் அபிவிருத்தியை தடுக்காதே,போரால் தொலைக்கப்பட்ட காணி ஆவணங்களுக்கு மக்களா பொறுப்பு?, " போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியவாறு மக்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அத்துடன் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதனிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-19)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி,ஜூலை 3

தென்மராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாக காணப்படும் வகை 111 பாடசாலைகளுக்கு தகைமையுள்ள அதிபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் மற்றும் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கவுள்ளோர் வலய நிர்வாகப் பிரிவில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ஐ - 9)

## ராஜபக்சக்களின் ஆட்சி முடிவுக்கு

### ஐக்கிய மக்கள் சக்தி சூளுரை

கொழும்பு,ஜூலை 3

பஸில் ராஜபக்சவும் நாடாளுமன்றம் வரட்டும். அனைத்து ராஜபக்சக்களையும் 2024 ஆம் ஆண்டில் வீட்டுக்கு அனுப்புவதற்கான அரசியல் வியூகத்தை எமது கட்சி வகுத்து வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான தற்போதைய அரசு அனைத்து வழிகளிலும் தோல்வி கண்டுள்ளது. இந்த நிலையில் நாட்டை மீட்பதற்கான வழி தேடாமல் அமெரிக்காவுக்கு ஓடிய நபர் தான் பஸில் ராஜபக்ச. அவர் அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிட மறுக்கின்றார். அவரின் குடும்ப உறுப்பினர்களும் கைவிட மாட்டார்கள். எனவே, இப்படியானவர்களால் எப்படி நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்? தாய்நாடு மீது பற்றில்லாத ஒப்பந்தங்களுக்காகச் செயற்படும் நபர்களால் முடியவே முடியாது என்பதே எமது கருத்தாகும்.

பஸில் ராஜபக்சவும் வரட்டும். அனைத்து ராஜபக்சக்களும் ஓரணியில் இருக்கட்டும். அவர்களை வீட்டுக்கு அனுப்பும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம். பஸிலை நாடாளுமன்றம் வரவிடமாட்டோம் என்று விமல், வாசு மற்றும் கம்மன்பில போன்றோர் சூளுரைத்தனர். அவர்களின் முடிவுக்காகவும் காத்திருக்கின்றோம் - என்றார். (ஒ.4,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒன்றுசேர்ந்து கட்டியெழுப்புவோம்

த.ரமேஸ்குமார்
பதில் செயலாளர்
யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை

## சர்வதேச கூட்டுறவு தினம் இன்றாகும்

சர்வதேச ரீதியில் கூட்டுறவு அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு நிறுவனமாக விளங்கும் சர்வதேச கூட்டுறவு அமையம் 2021ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு தினக் கருப்பொருளாக "ஒன்று சேர்ந்து சிறப்பாக மீளக்கட்டியெழுப்புவோம்" என்ற கருப்பொருள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது காலத்துக்கேற்ற எண்ணக்கரு என்பதில் ஐயமில்லை. இன்று அகில உலகத்தையே ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கும் கொவிட்19 கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக உலகில் உள்ள நாடுகள் அனைத்திலுமே இயல்பு நிலை அழிந்துவிட்டது. மாறாக அச்சம்கொண்ட அசாதாரண சூழ்நிலையே காணப்படுகின்றது. இத்தகைய அசாதாரண சூழ்நிலையிலிருந்து சாதாரண இயல்பு நிலைமை வாழ்க்கைக்கு மாற்றியமைத்து அதன் வழியே பயணித்து நல்லதொரு வளமான இயற்கையுடன் கூடிய இனிமையான சூழலை உருவாக்க வேண்டிய தேவை அனைவரிடத்திலுமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஒப்படைக்கப்பட்டுள்ள இந்தப் பொறுப்பை செவ்வனே சீராக நிறைவேற்ற வேண்டி அனைவரும் உறுதியெடுப்போம்.




மக்கள் இயக்கமான கூட்டுறவுக்கு, அதன் கொள்கைகள் மற்றும் சிந்தனைகளுக்கு அமைய மக்கள் சேவைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை உள்ளது. மக்களால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற அமைப்பே கூட்டுறவாகும். கூட்டுறவு அமைப்புக்கள் முழுமையான பொருளாதார சமூக கலாசார நிறுவனங்களாக விளங்குகின்றன. கூட்டுறவில் இணையும் அனைவரும் அதன் அங்கத்தவர்களாகக் கருதப்படுகின்றனர். அங்கத்தவர்களின் பிரச்சினைகள் யாவற்றையும் முற்றாக நீக்கி அவர்களின் பொருளாதார சமூக கலாசார அம்சங்களை மேம்படுத்துவதே இந்த அமைப்புக்களின் அடிப்படை நோக்கமாகும்.

மனித மேம்பாட்டுக்கு அச்சுறுத்தல்களாக விளங்குகின்ற முதலாளித்துவப் போட்டி, சுரண்டல், சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் இலாப நோக்கம் போன்ற சமூக விரோத சக்திகளை கூட்டுறவு அமைப்புக்கள் முழுமையாக இல்லாதொழிக்க தொடர்ச்சியாக உழைத்து வருகின்றன. அதனால் இவை முற்றிலும் மக்கள் அமைப்புக்களாக ஜனநாயக நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. மனித நாகரீகத்தின் அடிப்படையே கூட்டுறவு ஆகும்.

உலக மக்கள் அனைவரையும் கூட்டுறவு அமைப்புக்களில் இணைத்து அதன் அங்கத்தவர்களாக ஆக்கி அமைதியும் பொருளாதார வளமும் மிக்க சமாதானமும் நிறைந்த ஒரு உலகக் கூட்டுறவு சமுதாயமாக உருவாக்குவதே கூட்டுறவின் புனிதமான நோக்கமாகும். இத்தகையதொரு நோக்கம் வேறு எவ் அமைப்புக்களிலும் இல்லாத தனித்துவம் வாய்ந்த சிறப்புத் தன்மை கொண்ட அம்சமாகும். முதலாளித்துவத்தை ஒழித்து எல்லோரும் சமத்துவமாகவும் சுதந்திரமாகவும் சகோதரத்துவத்துடனும் இணைந்து அங்கத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி அதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை உயர்த்தி பிரதேச பிராந்திய தேசிய பொருளாதாரத்தை வளம்பெறச் செய்வதற்கு அனைவரும் ஒன்றுசேர்ந்து சிறப்பாக செயற்படுவோம்.

தற்போது உலகை உலுக்கிக்கொண்டிருக்கும் கொவிட்- 19 கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சர்வதேச அரங்கில் பொருளாதாரத்தில் தளம்பல் நிலை ஏற்பட்டு அது சகல நாடுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய காலகட்டத்தில் கூட்டுறவு என்ற உறவுமுறை தொடக்கம் அதன் அமைப்பு, கட்டமைப்பு ரீதியிலான உலகளாவிய தன்மையின் தனித்துவம் உணரப்பட்டிருக்கின்றது.

இந்த கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தால் அழிந்து போயுள்ள வளர்ச்சியற்ற பொருளாதாரக் கட்டமைப்புக்களை மீளவும் புத்தெழுச்சியுடன் புதிய பரிமாணத்தில் கட்டியெழுப்பவேண்டிய தேவை அனைத்து தரப்பினரிடத்திலும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் 99வது சர்வதேச கூட்டுறவு தினத்தின் கருப்பொருளும் அவ்வாறானதுதான். 'ஒன்று சேர்ந்து சிறப்பாக மீளக் கட்டியெழுப்புவோம்' கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு போன்ற கூட்டுறவுச் சிந்தனைகளுக்கு அமைய அனைவரும் ஒன்று சேர்ந்து பயணிப்போம்.

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் எமது தாய்நாடான இலங்கையிலிருந்தும் கொடிய வைரஸ் கொரோனாவை விரட்டியடித்து அதன் தாக்கத்தில் இருந்து மீண்டு நாட்டு மக்கள் அனைவரும் கூட்டுறவு என்ற கொடியின் கீழ் ஒன்றுசேர்ந்து எமது நாட்டையும் எமது பொருளாதாரத்தையும் மீளவும் கட்டியெழுப்புவோமாக.

# தென்மராட்சி பிரதேசத்தில் 53 மண்துரவுகள் சீரமைப்பு

சாவகச்சேரி,ஜூலை 3

தென்மராட்சி பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் 7 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 53 மண் துரவுகள் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் பெரும்பாலான விவசாயிகள் விவசாய நடவடிக்கைக்கு மண்துரவுகளிலிருந்து நீர் பெற்று பயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.

இவர்களின் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த துரவுகளை ஆழமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் எழுதுமட்டுவாழ் தெற்கில் 30 துரவுகளும், வெள்ளாம்போக்கட்டியில் 9 துரவுகளும், அல்லாரை மற்றும் விடத்தற்பளை ஆகியவற்றில் தலா 4 துரவுகளும், பாலாவியில் 3 துரவுகளும், எழுதுமட்டுவாழ் வடக்கில் 2 துரவுகளும், கச்சாயில் ஒரு துரவுமாக 53 மண் துரவுகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. (ஐ-9)

# கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவரைக் காணவில்லை

## நெடுந்தீவில் சம்பவம்

நெடுந்தீவு,ஜூலை 3

நெடுந்தீவுக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரைக் காணவில்லை என்று உறவினர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சில்வர்ஸ்டார் மரியதாஸ் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை மீன்பிடிக்க கடலுக்குச் சென்றவர் நேற்றுக்காலை ஆகியும் வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவ பிரிவினரால் காணாமல் போன மீனவரது விவரம் சேகரிக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### விளம்பர ஒலிபரப்புச் சேவைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள விளம்பரசேவைகள் 01.08.2021ம் திகதி முதல் 31.07.2022 ம் திகதி வரையான ஒருவருட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் பெறுகைக்குழு யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது
3. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையின் (தொலைபேசி இல 0212215978) நானாவித இறைவரிப்பகுதியுடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
4. விண்ணப்பிக்க விரும்பும் கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 05.07.2021 திகதி முதல் 19.07.2021ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாகிய ரூபா 1.000.00 இனை செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
5. கேள்விகள் 20.07.2021 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரடியாகவோ/பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர் விண்ணப்பிக்க விரும்பும் ஒலி பரப்புச்சேவையின் பெயரினை/கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழே உள்ள முகவரியில் வருகைதரும் கேள்விதாரர்கள் / பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் காலத்தின் பின் (20.07.2021ம் திகதி 10.00 மணி) உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
6. கீழ் அட்டவணையில் குறிப்பிட்டவாறான கேள்வியின் பிணைப்பொறுப்பினை மாநக ரசபையில் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**கேள்வி ஆவணம் வழங்கும் /பெற்றுக்கொள்ளும் காலம் :- 05.07.2021 முதல் 19.07.2021 வரை**

**கேள்வி மூடுதல்/திறத்தல் :- 20.07.2021 மு.ப 10.00 மணி**

| இல | கேள்வி அடையாள இலக்கம் | கேள்விவிபரம் | மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித்தொகை (ரூபா மில்லியன்) | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத தொகை ரூபா | கேள்வி பிணை முறி விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை ரூபா | செலுத்தியிருக்கும் காலம் |
| 1 | MC/N.M.B/F-08/B.01/2021 | நவீனசந்தை கட்டிடத்தொகுதி மேல்மாடி | 1.8 மில்லியன் | 1 வருடம் | 1,000.00 | 36,000.00 | 31.08.2021 |
| 2 | MC/S.M/F-08/B.02/2021 | சொங்குத்தா சந்தைத் தொகுதியில் - மீன்சந்தைக்கு மேல் | 0.6 மில்லியன் | 1 வருடம் | 1,000.00 | 12,000.00 | 31.08.2021 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாநகரசபை யாழ்ப்பாணம்.**

## உறக்கம் கலைத்தது தால்: பல்லாயிரம் மக்கள் ஓட்டம்

யகார்தா, ஜுலை 3

பிலிப்பைன்ஸில் மிகவும் உயிர்ப்புடன் உள்ள எரிமலைகளில் ஒன்றான தால் எரிமலை நேற்றுமுன்தினம் முதல் சீற்றமடைந்த நிலையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அவசர அவசரமாக தம் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். கடந்த வருடம் ஜனவரி மாதம் இந்த எரிமலை வெடித்துச் சிதறியபோது பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. லாவா குழம்புச் சிதறல்களால் சிலர் உயிரிழந்தனர். இந்த நிலையில் மீண்டும் அந்த எரிமலை வெடிக்க ஆரம்பித்துள்ளமை பல அச்சப்பாடுகளை அங்கு தோற்றுவித்துள்ளது. சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்

### செல்லையா அரசரத்தினம்

**தோற்றம் 18.07.1950** **மறைவு 02.07.2021**



காரைநகர் வாரிவளவைப்பிறப்பிடமாகவும் சேச் லேன், தாவடி கொக்குவில் மற்றும் பண்டாரிக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அரசரத்தினம் அவர்கள் நேற்று (02.07.2021) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரபாகு செல்லையா அன்னம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் கந்தையா இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜகாந்தியின் அன்புக் கணவரும் பிரணவன், பிரஷாந்தன், பிரகலாதன், பிரநீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலாமணி, கணேசலிங்கம், சாவித்திரிதேவி, சாரதாதேவி, லோகேஸ்வரன், லோகேஸ்வரி காலஞ்சென்ற தனலட்சு[illegible] ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஹறிணியின் அன்பு அப்பப்பாவும், கஸ்தூரி, சரணியா, நாகதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2021) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தசணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 209 2023 (மகன்)**

## மரண அறிவித்தல்

### உமாசங்கரி முத்துக்குமாரன் ( B.A. Hons )

**முன்னாள் விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை யாழ் பல்கலைக்கழகம்**



வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், இணுவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த உமாசங்கரி முத்துக்குமாரன் கடந்த (30.06.2021) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதச் செட்டியார் முத்துக்குமாரன் இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், பிரதீஸ் செந்தூர்குமரனின் அருமைத் தாயாரும், அன்னபூரணி, நகுலேஸ்வரன், காஞ்சனா மாலை, சிவாபசுபதி, உமையகௌரி, சாந்தசொரூபி ஆகியோரின் அருமைச் சகோதரியும், சத்தியமூர்த்தி, தவமலர், இப்னு சுஹூட், மகேந்திரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், ஷர்மிளா, நௌஷன், ஆகியோரின் அன்புச் சித்தியும் குற்றாலன், தட்சணா, துலக்ஷணா ஆகியோரின் பெரியம்மாவும், கோகுலனின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கடந்த ( 01.07.2021 ) வியாழக்கிழமை நடைபெற்று, பிற்பகல் 1.00 மணியளவில், கோம்பயன் மணல் இந்து மயானத்தில், பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாகியது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 12, துரைவீதி,**
**இணுவில் தெற்கு,**
**இணுவில்**
**078 526 0403**

**தகவல்:**
**மு. சிவாபசுபதி**
**( சகோதரன் )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka
## (திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)

### வணிகமாணி பட்டப்படிப்பு 2018/2019 (வெளிவாரி)
### Bachelor of Commerce Degree Programme – 2018/2019 (External)
### புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2021

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) – 2018 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

அல்லது

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வணிக முதற்தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

- ஏற்கனவே வணிக முதற்தேர்வு அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகளில் சித்தியடைந்து விலக் களிப்பு கோருவோர். உரிய தகமைகளை குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

முக்கிய குறிப்பு :– இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**
விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**
விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 இணை 890052080000064 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி. பற்றுச்சீட்டினை யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அல்லது

www.codl.ac.lk எனும் முகவரியில் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**
விண்ணப்பங்கள் யாவும் பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்க லைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வணிகமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம் - 2018/2019" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 31.07.2021 (சனிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக் கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**
**மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.**

**பதிவாளர்**
**03.07.2021**

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES
## FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

University of Jaffna will entertain applications to reach us on or before 14.07.2021 from qualified Sri Lankan Nationals for the under mentioned Temporary posts.

- **Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in**
  *Accounting / Commerce / Financial Management / Human Resource Management / Marketing / Tourism and Hospitality Management*

*Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator.*

**Minimum Requirements/Qualifications:**

1. A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours;

OR

2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;

OR

3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, **AND** (b) a recognized postgraduate degree in the relevant subject

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/- p.m (Fixed) |
| Temporary Demonstrator | Rs. 40,920/. p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.

Application forms and other details will be available in the website: www.maco.jfn.ac.lk. Downloaded application forms should accompany with the paid Bank Slip for deposit of a sum of Rs.100/- credited to the **Peoples' Bank Reference No: 970000090000387** of Bursar, University of Jaffna.

Duly completed application forms along with payment receipt and relevant educational certificates to be posted to the below mentioned address: Assistant Registrar, Faculty of Management Studies and Commerce, 10th Lane, Kalasalai Road, Thirunelvely, Jaffna.

Those who wish to apply for more than one post should submit separate application for each post.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**Registrar,**
**University of Jaffna,**
**02.07.2021**



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

### அடியார்களுக்கான அறிவித்தல்

அம்பிகை மெய்யடியார்களே!

கொரோனா தொற்று காரணமாக சுகாதார துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைய மட்டுப்படுத்தப் பட்ட அடியார்களுடன் மட்டுமே ஆலய நித்திய பூசைகள் இடம் பெறுகின்றன என்பதனை தெரிவிப்பதோடு அடியார்களின் நேர்த்திகள். அபிஷேகங்கள் தற்காலிக மாக இடைநிறுத்தப் பட்டுள்ளதுடன் அவை மீள ஆரம்பிக்கப்பட்டதும். அடியார்களுக்கு அறியத்தரப்படும் என்பதனையும் ஆலய தரிசனத்திற்கு தற்போது வருகை தருவதனை தவிர்த்துக்கொள்ளுமாறும் நாட்டில் ஏற்பட்டுள்ள கொடிய கொரோனா நோய்த் தொற்றானது முற்றாக நீங்க எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி தாயை தங்கள் இல்லங்களில் இருந்து தரிசித்து வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அறங்காவலர் சபை**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.**
**நயினாதீவு : 01**

# கண்ணீர் அஞ்சலி

யா/டிறிபேக் கல்லூரியின் பாடசாலைப் பணியாளர்
செல்வி டேவிட் வதனி அவர்களின் சகோதரர்

## டேவிட் கனிஸ்வரதாஸ்



அவர்கள்
1.7.2021அன்று
காலமானார்
அன்னாரின் பிரிவால்
துயருறும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபத்தினை
தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்தி அடைய
இறைவனை
வேண்டுகிறோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/டிறிபேக் கல்லூரி**

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை இளையதம்பி
**( முன்னாள் முகாமையாளர் இலங்கை போக்குவரத்துச்சபை )**

ஆவரங்காலை பிறப்பிடமாகவும் ஊற்றங்கரை தண்ணீ ரூற்று முள்ளியவளையை வதிவிடமாகவும் கொண்ட உயர்திரு. வேலுப்பிள்ளை இளையதம்பி (முன்னாள் முகாமையாளர் இலங்கை போக்கு வரத்துச்சபை) அவர்கள் நேற்று (2021.07. 02 ) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற திருமதி த. காசிப்பிள்ளை, திரு. வே. கந்தசாமி, திரு. வே. சுந்தரம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் யோகசௌந்தரி (ஓய்வு பெற்ற .ஆசிரியை) இன் அன்புக் கணவரும் வைத்திய கலாநிதி சு. அனுசியா, (களுபோவில வைத்தியசாலை) அஜந்தீபன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பொது வைத்திய நிபுணர் சுதர்சன் (களுபோவில வைத்தியசாலை), அர்ச்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் அருட்சயா, ஆருண்யா, அறோசிகா, ஆகாஸ் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 03.07.2021 ) முற்பகல் 10.00 மணியளவில் ஊற்றங்கரையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாமாண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 08 . 09 . 1973

ஆண்டவன் அடியில் 14 . 07 . 2020



### அமரர் குணரெட்ணம் ஞானபாலன் (கண்ணன்)

பிறப்பிடம் – அனலைதீவு

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் கண்ணனே உன் பிரிவால்
மீண்டெழ முடியாமல் மனைவியவள் தவிக்கின்றேன்.
கண்ணை இமை காப்பது போல் என்னைக்காத்த என்னவரே!
என்னை விட்டு எங்குசென்றீர்கள்?
நாள்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடமாகியும் உங்கள் நினைவுத்
துயரிலிருந்த மீண்டெழ முடியவில்லை என்னால்
உங்கள் கைபிடித்து கடைத்தெருவில் நடந்த
உங்கள் மகனோ அப்பா அப்பா என்று இன்னும்
அழுகின்றான். உடன் பிறந்த உறவுகளோ
இம் மண்ணில் உங்கள் நினைவால் அனுதினமும் வாடுகின்றனர்.
ஆண்டொன்று ஆகியென்ன ஒரு யுகம் தான் ஆனாலும்
எம்முடலில் உயிர் இருக்கும் வரை உம் நினைவு
அழியாதென்று உம் உறவுகள் இங்கே அழுது புலம்புகின்றனர்
கருணையில்லாக் காலனவன் உங்களை அழைத்தாலும்
உங்கள் ஆத்மா ஈடேற வேண்மென்றே எந்நாளும் வேண்டுகிறோம்.

**இல. 502, 7ம் யுனிற்,**
**கல்மடுநகர் இராமநாதபுரம், கிளிநொச்சி.**

**மனைவி,**
**மகன்**

## தேவை

வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு 076 923 7686**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19 . 06 . 1947

மறைவு 03 . 06 . 2021



### அமரர் சிவலிங்கம் சரஸ்வதி

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**உரும்பிராய் வடக்கு,**
**கற்பகப்பிள்ளையார் கோவிலடி,**
**உரும்பிராய்.**

**உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

1. The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Extension of Renal Unit at Dialysis Unit | 500.00 | 110,000.00 | 91 | 5.54 | C 7 |
| 2. | Renovation Works for CEB Building | 500.00 | 76,000.00 | 91 | 3.76 | C.8 |
| 3. | Construction of Motor Bike Park back side of Ward No 24, Construction of Shed at Canteen side , Fixing Iron Grill for Medical Ward Balcony Area, Fixing Window Iron Grill for Ward No 07, 23A & Iron Grill for Drainage Cannel in front of Water Supply Unit and Aluminium Works at ANC Clinic, near the Eye Clinic & ENT Clinic, Cardiology Clinic and Aluminium Door for Concrete Wall Cupboards for BES Unit | 500.00 | 64,000.00 | 91 | 3.16 | C 8 |
| 4. | Renovation of Ward No 06,Extension and Facilities of Washroom for Consultant Tea Lounge, Renovation of X-ray Department Toilets and Construction of Toilet for Washing Room near Kitchen. | 500.00 | 61,000.00 | 91 | 3.04 | C 8 |
| 5. | Extension of Office Accounts Unit side of Admin Building | 500.00 | 59,000.00 | 91 | 2.93 | C 8 |
| 6. | External Painting of JICA Building, Painting Works for Old OPD Corridor, All Security Booth and Respiratory Unit and Supply and Fixing of Curtins at Ward No 27 & Accountant Room | 500.00 | 47,000.00 | 91 | 2.31 | C 8 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 05.07.2021 up to 19.07.2021 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 20.07.2021, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**03.07.2021.**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 19 . 10 . 1951

விண்ணில் 03 . 06 . 2021



### அமரர் ஜோசப் விக்ரர் ஜெயராஜா

கடவுளை கண்டதில்லை உம் கண்ணில் தான் கண்டோம்.
கண்முன்னே நடமாடிய தெய்வம் – நீங்கள்
மண்ணைவிட்டுப் போனாலும் – எம் கண்ணை விட்டகலாமல்
விண்ணுலகில் நீர் இருந்து மண்ணுலகில்
எம்குறை தீர வேண்டிருவீர் விண்ணக தந்தையிடம்.

அன்பான இறைவா,

இவ் உலகிலிருந்து உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அடியான் அமரர் யோசப் விக்ரர் ஜெயராஜா அவர்களை உமது நித்திய வான் வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம்.

இவரின் பிரிவின் துயர் அறிந்து நேரில், தொலைபேசி, குறுந்தகவல்கள் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவி ஆறதலளித்த உற்றார், உறவினர், நண்பர்கள்,அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவரின் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் நாளையும் விசேட கண்காணிப்பு

## தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 3

"வார இறுதி நாள்களான இன்றும் நாளையும் சுகாதார ஒழுங்கு விதிமுறைகளை மீறிச் செயற்படும் நபர்களை கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழு கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது." என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களின்படி திரையரங்குகள், விடுதிகள், கேளிக்கை நிலையங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் பிற பொதுக்கூட்டங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

எனவே, சுகாதார அதிகாரிகள் பிறப்பிக்கும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுவது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவு மூலம் தகவல்களை சேகரிக்குமாறும் பொலிஸ் நிலையங்கள் கேட்கப்பட்டுள்ளன.

எனவே, பொதுமக்களை வீட்டுக்குள் தங்கியிருந்து தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும்" என்றார். (த-22)

# மாணவர்களுக்கு தடுப்பூசி கட்டாயம்

கொழும்பு, ஜூலை 3

உயர்கல்வி மற்றும் மேலதிக் கல்வி நடவடிக்கைகளைப் பெற்றுக்கொள்ள வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்லும்போது தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக்கொள்வது அவசியம் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக www.army.lk/covid19 என்ற இணையதளம் மூலம் தம்மை பதிவுசெய்துகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-319)

# வலைகளை இழுத்துச் சென்ற இந்திய இழுவைப்படகுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் நமது கரையிலிருந்து பத்து கிலோமீற்றர் தூரம்வரை வந்து எமது வலைகளை இழுத்துச் சென்றுள்ளன என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உப தலைவருமான வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சியில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீன்பிடி தடைக்காலம் என்பதால், இரண்டு மாதங்களாக இந்திய இழுவைப் படகுகள் இங்கு வரவில்லை. ஆனால் நேற்று (நேற்று முன்தினம்) அதிகாலை காங்கேசன்துறை கட்டைக்காடு சுண்டிக்குளம் போன்ற பகுதிகளில் நாம் தொழில் செய்கின்ற வலைகளை இழுத்துச் சென்று நாசம் செய்துள்ளன.

இதன் மூலம் எங்களுடைய 75 வலைகள் இழுத்துச் செல்லப்பட்டன. வல்வெட்டித்துறைப் பகுதியில் 3 முரல் வலைகள் நாசம் செய்யப்பட்டுள்ளன.

இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கடற்றொழிலாளர்களும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

இது சம்பந்தமாக இந்திய தூதரகம் மற்றும் கடற்றொழிலாளர் அமைச்சர் ஆகியோரிடம் பேசினோம். தீர்வு பெற்று தருகின்றோம் என்று கூறியுள்ளனர். இதுவரை இந்திய இழுவைப் படகுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை என்றார். (த-20,26)

## மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு
## விலைக்கேள்விக்கான கோரல் - 2021

01. வடக்கு மாகாண மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவுற்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான மற்றும் தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்வியினைக் கோருகின்றார்.
02. விலைக்கேள்வியானது தேசியபோட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது
04. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2061423) மாவட்ட பொது வைத்தியசாலையில் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
05. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/- காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 05.07.2021 தொடக்கம் 18.07.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
06. விலைக்கேள்விகள் 19.07.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ மாவட்டப்பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 19.07.2021 ஆம் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்
07. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் 12.07.2021 ஆம் திகதி 9.00 மணிக்கு நடைபெறும்.
08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்விஅடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைவிபரம். | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| DGH/MU/PSDG/2021/03 | Construcion of Drivers Quarters at DGH-Mullaitivu | 4.61 | 101 Days | C8 and C7 (Buildings) | 46,000.00 | Till 18.10.2021 |

**வைத்திய கலாநிதி. N.Umashankar**
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி 2021

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(1) ற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு, கட்டிட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை 05.07.2021 ஆம் திகதியில் இருந்து 19.07.2021 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 05.07.2021 ஆம் திகதியிலிருந்து 19.07.2021 ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 20.07.2021 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 12.07.2021 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி கிழக்கு பிரதேச சபையின் பெறுகை குழுவின் முடிவே இறுதியானது. பெறுகை குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
12. கேள்வி ஆவணங்களை வழங்கும்போது கொரோனா (COVID 19) வைரஸ் தொற்றுத்தொடர்பான சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும். கேள்வி ஆவணங்களை பெறவரும்போது கூட்டமாக வருவதை தவிர்த்து ஒருவர் மட்டும் வருகை தரவேண்டும். சுகாதார முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வருகை தர வேண்டும்

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(13)/2/PSDG /2/2021 | சாங்கமம் வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், கோப்பாய் | 4.54 | 90 நாட்கள் | C8 அல்லது C7 | 45,440.00 | 15.11.2021 (118 நாட்கள்) |

**தியாகராசா நிரோஷ்**
**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர்.**
**யாழ்ப்பாணம், வடமாகாணம்.**

03.07.2021.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 கட்சிகளின்...

மானது என்பதை, தமிழ்த் தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இரண்டாவது சந்திப்புக்கு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறிகாந்தா, செல்வம் அடைக்கலநாதனுக்கு அனுப்பிய பதில் கடிதத்திலேயே மேற்கண்ட விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

உங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் மெய்நிகர் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு எமது கட்சிக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்புக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறித்த கலந்துரையாடல் கடந்த வாரம் நிகழவுள்ளது என்று அறிவிக்கப்பட்டு, 6 தமிழ்க் கட்சிகளோடு அது மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்டு, அந்த ஒத்திவைப்பு தொடர்பில் உங்களால் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில், ஒத்திவைப்புக்கான காரணங்கள் உட்பட, பல்வேறு விடயங்கள் பிரஸ்தாபிக்கப் பட்டிருந்தன. இப்போது எமது கட்சிக்கும், நாம் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் உள்ள இன்னுமோர் கட்சியான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பது, ஊடக சந்திப்பில் நீங்கள் குறிப்பிட்டதைப் போலவே, 'தவறுகள்' திருத்தப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்தி நிற்பதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். இதேவேளையில், இன்னும் சில கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது எமது கருத்து ஆகும்.

மேலும், இந்த வருடம் தை மாதத்தில் எமது கட்சியால் முன்னெடுக்கப்பட்ட, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைந்த சந்திப்புகள், உங்கள் கட்சி உட்பட 9 தமிழ்க் கட்சிகளின் பங்களிப்போடு ஆக்கபூர்வமாகவும் ஆரோக்கியமாகவும் தொடர்ந்து நடத்தப்பட்டிருந்தும், தீவிரம் அடைந்துள்ள கொரோனா பெருந்தொற்று சூழ்நிலையில் தொடர்நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாமல், அவை ஸ்தம்பிதம் அடைந்ததை நாம் எல்லோரும் நன்கு அறிவோம்.

இப்போது, இந்த 9 கட்சிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை தொடர வேண்டும் என்பதும், இந்த செயல் வட்டத்துக்குள் கொண்டுவரப்பட வேண்டிய, வேறு சில தமிழ்க் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, எம் இனத்தின் நலன் நாடும் ஒரே நோக்குடன் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதும் எமது விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

தமிழ்க் கட்சிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான சந்திப்புக்களை ஒழுங்கு செய்வதற்கென ஏற்கெனவே அழைப்பாளர்களாக நியமிக்கப்பட்டு செயற்பட்டு வந்திருந்த எம்.கே.சிவாஜிலிங்கம்,சி.வி.கே.சிவஞானம் ஆகிய இருவர் ஊடாக, ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதில், சம்பந்தப்பட்ட கட்சிகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும் என்பதில் நாம் ஆர்வமாக உள்ளோம்.

விரைவில் ஒருங்கிணைந்த தமிழ்க் கட்சிகளின் நேரடியான சந்திப்பை நடத்த முடியும் என நாம் நம்புகின்றோம்.

உங்கள் அழைப்புக்கு மீண்டும் நன்றி கூறுவதோடு, உங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் அன்புரிமையோடு நாடி நிற்கின்றோம். என்றுள்ளது. (த-26)

## முள்ளியவளை...

பில் வீட்டின் உரிமையாளர் முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்கு தகவலளித்தார். அதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் குறித்த வெடிபொருள்களை மீட்டனர்.

இதன்போது, கிணற்றில் வெடிக்காத நிலையில் மூன்று ஆர்.பி.ஜி. எறிகணைகள் காணப்பட்டுள்ளன.

அவற்றை மீட்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (த-19)

## அல்லைப்பிட்டி...

பட்டுள்ளனர். அத்துடன், விடுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று மாலை இடம் பெற்றது.

அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள நட்சத்திர விடுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 19 பேர்

நண்பர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாடுவதற்கு முற்பட்டுள்ளனர்.

அதனையறிந்த அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர், ஊர்காவற்றுறை பொலிஸாருடன் விடுதிக்குச்சென்று தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்று 19 பேரையும் அந்த விடுதியிலேயே சுயதனிமைப்படுத்தினர். அத்துடன், நட்சத்திர விடுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. சுயதனிமைப்படுத்தப்பட்ட அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். (த-இ)

## அடையாள...

ளது என்று ஆள்பதிவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பிரதேச செயலகங்களில் உள்ள அடையாள அட்டை பிரிவுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் முன்பதிவு செய்துகொள்ள முடியும். ஏற்கனவே பதிவு செய்தவர்களின் அடையாள அட்டைகள் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

அழைப்பை ஏற்படுத்தி முற்பதிவு மேற்கொள்வதற்காக தொலைபேசி இலக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி,

பத்தரமுல்லை பிரதான அலுவலகம் - 01152261126 / 0115226100

தென் மாகாண அலுவலகம் - 0912228348

வடமேல் மாகாண அலுவலகம் - 0375554337

வடமாகாண அலுவலகம் - 02422272201

கிழக்கு மாகாண அலுவலகம் - 0652229449 என்று திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-இ)

# கல்வி மறுக்கப்படுகின்றமைக்கு எதிராக இலங்கை ஆசிரிய சங்கம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 3

கல்விக்கான சமவாய்ப்புக்கள் தற்போதைய சூழலில் மறுக்கப்பட்டு வருகின்ற நிலைமையை கருத்திற்கொண்டு இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு மேற்கொண்டுள்ளது.

கொவிட் தொற்று கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக ஏற்பட்டுள்ள நிலையிலும், மாணவர்களுக்குரிய கல்விக்கான சமவாய்ப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மத்திய கல்வி அமைச்சோ வடக்கு மாகாணக் கல்வி அமைச்சோ எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை. சூம் மூலமான ஒன்லைன் வகுப்பு என்ற மாயையின் ஊடாக இந்த கற்பித்தல் செயற்பாடு நடைபெறுகிறது என்று காட்டப்பட்டுக்கொண்டிருந்தாலும் 60 வீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் ஒன்லைன் மூலமான வகுப்புகளைத் தொடர முடியாத நிலையில் கடந்த ஒரு வருட காலமாக தமது கல்வி உரிமையை இழந்து நிற்கின்றனர்.

இந்த இழக்கப்பட்ட ஒரு வருட கால கல்வியை எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பாக ஒரு வருடம் கழிந்த நிலையில்கூட மத்திய கல்வியமைச்சு அல்லது வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு எந்த ஒரு திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை. இந்த நிலையே, கல்விக்கான சமவாய்ப்பு என்பதனை எட்டாக்கனியாக இருக்கின்ற மாணவர்கள் மத்தியில் மன உளைச்சலையும் மிகுந்த ஆதங்கங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அதாவது மாணவர்கள் விரக்தி நிலைக்குச் செல்கின்ற சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே இந்த நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக அனைத்து தரப்புக்களும் இணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு பதிவு செய்துள்ளது. (த-319).

## இரண்டு நகைக்கடைகள் யாழ்ப்பாணத்தில் தனிமை

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் மாநகரில் இரண்டு நகைக் கடைகள் சுகாதாரத் துறையினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் உள்ள இரண்டு நகைக் கடைகளே நேற்றுத் தொடக்கம் மறுஅறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டு நகைக் கடைகளிலும் பணியாற்றுபவர்களுக்கு கொவிட்19 நோய்த்தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில், மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)

# வெளிநாட்டு நிதி வருவதை கட்டுப்படுத்தி வர்த்தமானி

## நிதி அமைச்சரான பிரதமர் நேற்று வெளியீடு

கொழும்பு, ஜூலை 3

வெளிநாட்டு நிதி நாட்டிலிருந்து வெளியேறுவதைக் கட்டுப்படுத்துவதற்காக சில சட்டதிட்டங்களை உள்ளடக்கிய விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழர்கள் தாயகத்துக்கு நிதி அனுப்புவதைக் கட்டுப்படுத்தவே, இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

தேவைப்பாடுகளைப் பொறுத்து, ஆகக்குறைந்தது 10 ஆயிரம் அமெரிக்க டொலர் தொடக்கம் ஆகக்கூடியது 30 ஆயிரம் அமெரிக்க டொலர் வரையான நிதியை மாத்திரமே புலம்பெயர் மக்கள் தாயகத்துக்கு அனுப்பமுடியும் என்று வர்த்தமானியின் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி குறித்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார். இந்த நடைமுறை நேற்றிலிருந்து ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் என்று அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வெளியே வாழும் மற்றும் வேறு நாடுகளில் தற்காலிகமாக வசிக்கும் விசா பெற்றவர்கள் நிதி திரட்டல் தொடர்பில் குறித்த வர்த்தமானியில் உள்ள சட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-319)

03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை



தோற்றம் 12 . 03 . 1925

மறைவு 03 . 07 . 2018

அப்பா.! நீங்கள் மறைந்து ஆண்டுகள் மூன்று கடந்து விட்டது. ஆனால் உங்கள் ஆசி என்றென்றும் எங்களுடன் நிலைத்து நிற்கும்.

அப்பா.! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

நீங்கா நினைவுடன்...

குடும்பத்தினர்

271/1 நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 50,000...

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே 50 ஆயிரம் சைனோபோர்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்று சமூகமட்டத்தில் ஏற்றப்பட்டுள்ளன. கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. முதலாவது டோஸ் ஏற்றியவர்களுக்கு இரண்டாவது டோஸ் ஏற்றும் நடவடிக்கை தற்போது யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நேற்றைய நாளுடன் முதலாவது டோஸ் ஏற்றியவர்களில் 90 சதவீதமானோர் இரண்டாவது டோஸ் ஏற்றியுள்ளனர். இன்றைய தினத்துடன் அது பெரும்பாலும் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில், இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 10 லட்சம் சைனோபோர்ம் தடுப்பூசிகள் நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்தன. அவற்றில் 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை இன்று மாலை யாழ்ப்பாணத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 60 வயதுக்கும் மேற்பட்டோர் சுமார் ஒரு லட்சத்து [illegible] ஆயிரம் பேர் உள்ளனர் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று சுகாதார அமைச்சு அனுமதித்த காரணிகளுக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 300 கர்ப்பிணிகள் உள்ளனர். மேலும் யாழ்ப்பாண மாவட்டச்செயலரால், முன்களப் பணியாளர்களாக அடையாளப்படுத்தப்பட்ட 10 ஆயிரம் பேர் உள்ளனர். இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள முதியோர் இல்லங்களில் சுமார் ஆயிரத்து 500 முதியோர்கள் வரையில் உள்ளனர்.

இந்த வகையினர்க்கே இந்தத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ரீதியாகவும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேலும் தொடர்ச்சியாக தடுப்பூசிகள் யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

### டெல்டா...

சுகாதார பரிசோதர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்துக்கூறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"டெல்டா திரிபு வைரஸ் இலங்கையில் பரவியிருந்தாலும் அது சமூக பரவல் அடைந்துள்ளதா என்பதை அறிய சுகாதார அமைச்சு ஒவ்வொரு மாவட்டத்திலும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. நாங்கள் இந்தச் சூழ்நிலையை இலகுவாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் டெல்டா வைரஸை இனங்காணும் மரபணு பரிசோதனைகளை மேற்கொண்டுவரும் நிலையில் அது தொடர்பான முடிவுகள் விரைவில் வெளியிடப்படும்" என்றார். (த-22)

### 37 சாவு...

வித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 157 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 37 பேரில் 25 ஆண்களும், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அதற்கமைய உயிரிழந்த ஆண்களில் ஒருவர் 30 வயதுக்கு மேற்பட்டவர். ஐவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். 19 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். அதேவேளை, பெண்களில் மூவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். ஒன்பது பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நாட்டில் நேற்றும் ஆயிரத்து 737 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 62 ஆயிரத்து 709 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 29 ஆயிரத்து 541 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் இடைநிலை சிகிச்சை நிலையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 11 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

### பாடசாலைகள்....

குள் மீள ஆரம்பிப்பது குறித்து அவதானம் செலுத்துகின்றோம் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்றுநடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத் துறையினரின் அனுமதியுடன் இந்தச் செயற்பாட்டைத்தொடர தீர்மானித்துள்ளோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று அச்சம் காரணமாக அனைத்து பாடசாலைகளும் மாணவர்களின் நலன்கருதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

### கொரோனா...

என்றும், அதனையடுத்து அவர் சிகிச்சைக்காக மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கம்பகா மாவட்டத்தைச் சேர்ந்த 63 வயதுடைய முதியவர் ஒருவரே இவ்வாறு தவறான முடிவெடுக்க முற்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-18)

### மற்றொரு...

உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்குத் தீர்வுகோரும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் சூம் ஊடாக கலந்துரையாடுவதற்கு ரெலோ அழைப்பு விடுத்திருந்தது.

எனினும், தம்முடன் ஒத்துவராத கட்சிகளுக்கு ரெலோ அழைப்பு அனுப்பாமல் விட்டமையால், அது குறித்த விமர்சனங்கள் எழுந்தமையால், முதலாவது கலந்துரையாடல் இடம்பெறவில்லை.

இம்முறையும் சில விடுபடல்கள் இருந்தாலும், தனிப்பட்ட காரணங்களைக் கருத்திற்கொள்ளாமல் ரெலோ ஒற்றுமை அழைப்பை விடுத்துள்ளது. (த-26)

### கள்...

யின் தலைவர் கிரிசாந்த பத்திராஜா தெரிவித்தார். பனைஅபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா நிலைமை காரணமாக சகல கள் தவறணைகளும் மூடப்பட்டிருந்தன. இதன் காரணமாக கள் விநியோகமும் பாதிக்கப்பட்டிருந்தது. தற்போது மதுவரித் திணைக்களத்தால் விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கள் தவறணைகளை மீளத் திறப்பதற்கு அனுமதி வழங்குமாறு பொதுமக்களால் எனக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருந்தது.

குறித்த விடயம் தொடர்பில் உடனடியாகவே மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துக்கு அனுமதிக்காக விண்ணப்பித்திருந்தோம். ஆனால் அதற்கு சில நிபந்தனைகளுடன் வடக்கில் தவறணைகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார். தவறணைகளைத் திறக்க முடியும். ஆனால், தவறணைகளில் பொதுமக்கள் கள் அருந்த முடியாது. அந்தப் பகுதியில் ஒன்றுகூடி நிற்க முடியாது. சுகாதார நடைமுறையைப் பின்பற்றி கள் விற்க முடியும்.

பொதுமக்கள் தவறணைகளில் நின்று கள் அருந்த முடியாது, தவறணைகளுக்கு முன்னால் ஒன்றுகூட முடியாது என நிபந்தனைகளுடன் தவறணைகளைத் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் இந்த அனுமதியை சரியான முறையில் பின்பற்றி செயற்பட வேண்டும். என்றார். (த-26)

### நாயாற்றுப்...

யிருக்கின்றார்கள். இவர்களில் 5 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கடந்த 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது இந்தநிலையில், குறித்த பகுதியை மறுஅறிவித்தல் வரை முடக்குமாறு கொவிட் தடுப்பு செயலணிக்கு பரிந்துரைத்துள்ளோம் என்று, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்.உமாசங்கர் தெரிவித்தார். பருவகால கடற்றொழிலுக்காக சுமார் 700 வரையான சிறுவர்கள் ,பெண்கள், கர்ப்பிணிகள் என மிகவும் நெருக்கமாக வசித்து வருகின்றார்கள். இவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள சுகாதார பிரிவினர் நேற்றுச்சென்றபோது அவர்கள் அதற்கு ஒத்துழைக்கவில்லை. பலர் முரண்பட்டுள்ளார்கள். இந்த பகுதியிலிருந்து கடந்த 30 ஆம்கதி சிலர் பஸ் ஒன்றின் மூலமாக முடக்கப்பட்ட புத்தளம் கருக்குப்பனை என்ற இடத்துக்குச் சென்றுள்ளார்கள்.

அவர்கள் மீண்டும் இந்த இடத்துக்கு வர அனுமதிக்கப்படக் கூடாது. நாயாற்று பகுதியில் வந்திருக்கும் மக்கள் தொடர்பில் எந்தவித பதிவுகளும் எவரிடமும் இல்லாத நிலை காணப்படுகின்றது. சுகாதார ரீதியான முடிவை நாங்கள் எடுத்துள்ளோம். முல்லைத்தீவுக்கு ஆபத்தான நிலையை ஏற்படுத்தாதவாறு அதிகாரிகள் செயற்பட வேண்டும். என்றார். (த-19)

### தேர்தல்...

தனித் கூட்டுச் செயற்பாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட உடன்படும் அனைத்து சிறு கட்சிகளும் இணைத்துக்கொள்ளப்படும். எவரையும் தவிர்த்து விட்டுப் பயணிக்கும் எந்தவித தேவையும் கிடையாது. இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். ஜே.வி.பி. தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டமையால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட ஏனைய கட்சிகள் அழைக்கப்படவில்லை.

சிறு கட்சிகளின் தேர்தல் சீர்திருத்த பேச்சில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஏன் அழைக்கப்படவில்லை என்ற சர்ச்சை தொடர்பில் மனோகணேசன் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதி நிதித்துவம் செய்யும் இன ரீதியான சிறு கட்சிகளும், அரசியல் ரீதியான சிறு கட்சிகளும் தேர்தல் சீர்திருத்தம் என்ற பொதுப் பிரச்சினையைக் கூட்டாகவே எதிர்கொள்ள வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இந்தப் பிரச்சினை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுடன் பேசுகின்ற அதேவேளை, நானும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருடனும் இது தொடர்பில் பேசியுள்ளோம்.

இன்றைய விகிதாசார முறைமையே எமது பொது நிலைப்பாடு என்று நாம் அவருக்குக் கூறியபோது, சஜித் பிரேமதாஸ, தான் இன்றைய விகிதாசார முறைமைக்கு முழு ஆதரவு வழங்குகின்றேன் என்று எமக்கு உறுதியளித்துள்ளார். இது தொடர்பாக தமது கட்சிப் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவை அழைத்து அறிவுறுத்தல் வழங்கினார்.

தேர்தல் சீர்திருத்த பேச்சுத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுடனும் நான் நேரடியாகப் பல முறை பேசியுள்ளேன். வடக்கு மாகாணத்தில் புதிய கலப்பு முறைமை தமக்குச் சாதகமாக அமையக்கூடிய வாய்ப்புகள் இருந்தாலும், நாடு முழுக்க சிதறி வாழும், தமிழ், முஸ்லிம் மக்களின் நன்மை கருதி தாமும் இன்றைய விகிதாசார முறைமை தொடர்ந்து பேணப்படுவதை ஆதரிக்கத் தயார் என்று கூட்டமைப்பும் என்னிடம் உறுதியளித்துள்ளது- என்றார். (ஒ.22)

### எழுமாற்று...

205 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரின் பஸார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி ஆகிய நான்கு இடங்களில் நேற்றுமுன்தினம் காலை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். தொடர்ந்து சுகாதாரப் பிரிவினர் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டனர்.

அதன் பெறுபேறு நேற்று வெளியான நிலையில், 12 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த 12 பேரையும் கொரோனா இடைநிலை சிகிச்சை மையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏனைய பரிசோதனை மையங்களின் முடிவுகள் இன்று வெளியாகலாம் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (த-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணக வாழ்வில் இறைவனுடன் 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 28 . 06 . 1940

கண் நெகிழ 03 . 07 . 2013



அமரர் உயர்திரு.

### சின்னையா தவரெட்ணம் (J.P)

முன்னாள் தலைவர், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் யாழ் மாவட்டம் (கூட்டுறவுச் சபை), பணிப்பாளர் சபை உறுப்பினர், வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவர்

வாழ்க்கை என்னும் பாதையில் எம்மோடு பயணித்த எமது அப்பாவே ஆண்டுகள் ஈர் நான்கு சென்றாலும் உங்கள் அன்பான முகமும் பண்பான பேச்சும் எம்மை விட்டு மாறாது அப்பா. தினமும் உங்கள் பாசத்திற்காய் ஏங்கித் தவிக்கின்றோம். எம்முன்னே என்றும் உங்கள் இன் முகம் கடைசி வரை வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறோம். நெஞ்சை விட்டகலா உங்களின் நினைவுகளுடன் அனுதினமும் உங்களுக்காய் வேண்டுகிறோம்.

83/11 பீச்றோட்,
குருநகர்,
யாழ்ப்பாணம்

உங்கள் பாசத்தினால் வாடும்
குடும்பத்தினர்
077 828 0029





சாம்கரன் அபாரம், ரூட், மோர்கன் நிதானம்

# ஒருநாள் தொடரையும் இழந்தது இலங்கை!

லண்டன், ஜூலை 3

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரையும் இழந்தது இலங்கை அணி. ரி20 தொடரை இலங்கை அணி 0:3 என்ற அடிப்படையில் முழுமையாக இழந்த நிலையில் தற்போது மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும் 0:2 என்று இலங்கை பின்தங்கியுள்ளது.

ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இலங்கை அணியின் ஆரம்பம் படுமோசமாக அமைந்தது. அந்த அணி 6 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், 21 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் இழந்திருந்த நிலையில் தனஞ்சய டி சில்வா அபாரமாக விளையாடி 91 ஓட்டங்களைக் குவித்தார். ஹசரன்க 26 ஓட்டங்களையும், தசுன் சானக 47 ஓட்டங்களையும் பெற்றதை அடுத்து இலங்கை அணி மீண்டெழுந்து 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் சாம்கரன் 5 இலக்குகளையும், வில்லி 4 இலக்குகளையும் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களான றோய், பேர்ஸ்ரௌவ் வழக்கம்போல பலமான ஆரம்பத்தை வழங்கினர். அணி 76 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பேர்ஸ்ரௌவ். றோய் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் அணித்தலைவர் மோர்கன், ரூட் இருவரும் இணைந்து வெற்றிக்கு வித்திட்டனர். மோர்கன் 75 ஓட்டங்களையும், ரூட் 68 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)

## வேலை ஆட்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படும் Food City ஒன்றிற்கு பெண் வேலை ஆட்கள் தேவை.

345, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
076 103 7060

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து 1½ km தூரம் (பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)**

தொடர்பு: 077 4683 354. 076 734 1023, 077 064 2661

# மரண அறிவித்தல்

## திரு. வேலுப்பிள்ளை இளையதம்பி

**(சிவன்கோவிலடி ஆவரங்கால், புத்தூர்)**

**தலைவர் - VRT Trust (சிவசக்தி மணிமண்டபம்) அறங்காவலர், இளைப்பாறிய CTB Depot Manager முல்லைத்தீவு**



தோற்றம்
22.10.1938

மறைவு
02.07.2021

ஆவரங்கால் சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் தண்ணீரூற்று முல்லைத்தீவை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இளையதம்பி அவர்கள் நேற்று (02.07.2021) வெள்ளிக்கிழமை தண்ணீரூற்று முல்லைத்தீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான தண்ணீரூற்று கணபதிப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், யோகசவுந்தரி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் ஆருயிர்க் கணவரும், அஜந்தீபன் (கனடா), அனுசுயா (டாக்டர் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் சுதர்ஷன் (கொழும்பு) அர்சனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அட்சயா, ஆருன்யா (கொழும்பு), ஆரோஜீகா, ஆகாஷ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திருமதி. காசிப்பிள்ளை தம்பிநாதர், கந்தசாமி (Retired Deputy Auditor General Colombo), சிவசுந்தரம் (இளைப்பாறிய வரி அலுவலர் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகேஸ்வரி (கொழும்பு), அருளேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற ஜெகசவுந்தரி (ஆசிரியை), ஜேகதீஸ்வரன் (பரன்), காலஞ்சென்ற சுசிலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனகசிவம் (UK), கனகேஸ்வரி (ஆவரங்கால்), யோகசிவம் (UK), இராசசிவம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2021) சனிக்கிழமை தண்ணீரூற்றில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

கந்தசாமி (Brother-Colombo) 94715349150
Dr.Annusuya (Daughter-Colombo) 94773417640
Sivasundaram (Brother UK) 00447725567007
Ajantheeban (Son-Canada) 0014167313458



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03. 07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.